பாலக்காடு
ஆர். வி. ஜி.
பீடிகளை உபயோகியுங்கள்
தயாரிப்பாளர்கள்:
வ. வ. இராமசாமிப்பிள்ளை
அன் சன்ஸ்,
47, பீச்றோட், யாழ்ப்பாணம்.

★ ★
Registered at the G. P. O. as a Newspaper விலைசதம் 20

# ஈழநாடு

EELA NADU

வார மலர்


தேசிய தினசரி — National Tamil Daily
மலர் 8 — இதழ் 229

பராபவ கார்த்திகை 4 ஷஃபான் 5 (19-11-66) சனிக்கிழமை

முக்கிய அறிவித்தல்
இவ்வருடத்துக்குரிய விளம்பர நிதி யாவும் செலவாகி விட்டமையால் தயவு செய்து அன்பர்கள் எம்முடன் விளம்பரத்துக்கென தொடர்பு கொள்ள வேண்டாம் என வேண்டுகின்றோம்.
மில்க்வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

## குழந்தைகள் குடிக்கப் பால் இல்லாமல் தவிக்க

# 'ஆடம்பர பொருள் இங்கே எதற்கு'?



### ராஜாங்க மந்திரியிடம் மந்திரி 'தஹா' கேட்கிறுர்

—(நமது நிருபர் ஏச். நாணயக்கரா)—

காலி, வெள்ளி

'அத்தியாவசியப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளபோது தேவையற்ற ஆடம்பரப்பொருள்கள் இங்கு இறக்குமதியாக்குவதற்கு 'ஆர்டர்கள்' செய்யப்படுள்ளன இது தேசிய அரசாங்கத்தின் விரோதிகளான சில அரசாங்க உத்தியோகத்தர்களின் திட்டமிட்ட சதிவேலையே' என உள்நாட்டு அமைச்சர் டாக்டர் டபிள்யு. தகநாயகா ராஜங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

டாக்டர் தகநாயகா ராஜாங்க மந்திரிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

''குழந்தைகள் குடிப்பதற்கு பால் உணவுத் தட்டுப்பாடாக இருக்கும்போது ஆடம்பரப் பொருள்கள் இங்கு இறக்குமதி செய்யப்பட்டிருப்பதுகுறித்து பொது மக்கள் ஏளனமாகப் பேசிக்கொள்கிறூர்கள். தேசிய அர

(12-ம் பக்கம் பார்க்க)

### 'பொதுமேடைகளில் பேசுகையில் அவதானமாயிருங்கள்'

—பிரதமர் டட்லி

கொழும்பு, வெள்ளி

பொதுக்கூட்டங்களில் பேசும்போது மிகவும் அவதானமாக நடந்துகொள்ளும்படிபிரதமர் திரு. டட்லி சேனநாயகா இன்று நடைபெற்ற யு. என். பி. செயற்குழுக்கூட்டத்தில் வேண்டுகோளொன்றை விடுத்தார்.

தொடங்கஸ்லந்தையில் நடைபெறவிருக்கும்இடைத்தேர்தல்சம்பந்தமாக இன்று இக்கூட்டத்தில் ஆலோசனை செய்யப்பட்டபோதே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தேசியஅரசாங்கம் வாழ்க்கைச்செலவைக் குறைக்க எடுத்துவரும் நடவடிக்கை பற்றி பொதுமக்களுக்கு விரிவாக விளக்கம் கூறுமாறும் பிரதமர் தெரிவித்தார். தொடங்கஸ்லந்தைத் தொகுதியில் யு. என். பி. கண்டிப்பாக வெற்றிபெறவேண்டுமெனவும் அவர் எடுத்துக் கூறினூர்.

கூட்டம் முடிந்த பின்னர் பிரதமர் தமது சகாக்களுடன் குருநாகலைக்குச் சென்றூர். தொடங்கஸ்லந்தை இடைத்தேர்தலில் யு. என். பி. அபேட்சகராக யாரை நிறுத்துவது என்பது பற்றி அங்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

### பிரதமர் இந்திராவின் 49-வது பிறந்த தினம்


புதுடில்லி, நவ. 19

இன்று பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தியின் 49-வது பிறந்த தினம். இவரது பிறந்த தினத்தை முன்னிட்டு பல நாட்டுத் தலைவர்களும் வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளனர்

### அமைச்சர் 'திரு'வுக்கு பிறந்ததின வாழ்த்துக்கள்

கொழும்பு, வெள்ளி

தலஸ்தாபன அமைச்சர் திரு. எம். திருச்செல்வத்தின் 60-வது பிறந்த தினத்தை முன்னிட்டுஇன்று காலை இலங்கைப் பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் சரித்திர விரிவுரையாளர் திரு. சிற்றம்பலம் தலைமையில் அமைச்சரின் வாசஸ்



தலத்துக்கு சென்று அமைச்சருக்கு மாலையிட்டு பிறந்ததின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

எதிர்பாராத அவர்களது வருகையைக்கண்டு ஆச்சரியமும், ஆனந்தமும் அடைந்த அமைச்சர் தமிழர்கள்எல்லோரும் ஐக்கியப்படவேண்டுமெனவும் தமிழர்களின் நல்வாழ்வுக்காக [illegible] வேண்டுமெனவும் கூறினூர்.

### குளிர் சிரிப்பு . . . .



இதழ் மலரப் புன்னகை பூக்கும் இந்தச் சிறுமி வையத்துக் கவலைகளையெல்லாம் மறக்க வைக்கும் ஆற்றல்படைத்தவரோ?

—படப்பிடிப்பு-செல்லக்ஸ் ஸ்டுடியோ

### 'நாம் கடத்தப்பட்டு விற்கப்பட்டோர்'

#### மாணவர் இருவர் அமைச்சரிடம் அழுதழுது சொன்ன சோகக்கதை

காலி, வெள்ளி

தாம் எப்படி கடத்தப்பட்டு,குழந்தைகளை அடிமை யாக்கும் வியாபாரிக்கு விற்கப்பட்டோமென்ற சோகக்கதையை கொழும்பு இஸீன்லண்ட் கல்லூரியில் கல்விபயிலும் இரு மாணவர்கள் உள்நாட்டு அமைச்சர் டாக்டர்டபிள்யு. தஹநாயக்காவிடம் அழுதழுதுகூறியுள்ளனர்.

இந்த இருசிறுவர்கள் தமக்கு ஏற்பட்ட 'பயங்கர அனுபவ'த்தை அமைச்சரின் இல்லத்தில் சந்தித்து தெரிவித்துக் கொண்டனர். இரிலப்பனையில் வசிக்கும் ஏச். ஜி. சரத்விஜயஸ்ரீ, தெஹிவளையில் வசிக்கும் விக்கிரம

(12-ம் பக்கம் பார்க்க)

நகைகளுக்கு
யப்பான்
ஜுவலர்ஸ்
64, கன்னதிட்டி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 518 தந்தி: 'யப்பான்'

"சித்தி!"
"கணக்கியல் வினு விடை"
(ACCOUNTS)
G. C. E. (O/L) வகுப்புக்குரியது
(கடந்தகாலப் பரீட்சை வினுக்களடங்கியது)
அழகிய முறையில் அச்சிட்டு விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.
[விலை ரூபா 4-80]
தபாற் செலவு: 1-20
:விபரங்களுக்கு:
வர்த்தகக் கலாசாலை
230, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

2x2½

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் — அரசியல் நிருபர்

# மந்திரி சபையில் மீண்டும் மாறுதலா?

மந்திரி சபையில் பெரும் மாறுதல் எதையும் செய்யாது, சில இலாகாக்களை மட்டும் இடம் மாற்றி, மந்திரிசபையில் சில திருத்தங்களைச் செய்து 'எல்லோருக்கும் திருப்தி'யாக நிலைமையைச் சமாளிக்க பிரதமர் டட்லி சேனநாயக்கா முனைந்திருக்கிறார். இந்த இலாகா மாற்றங்கள் 'மந்திரி சபைக்குள் அதிருப்தியை' ஏற்படுத்தாவிடினும் ஆளும் கட்சிக்குள் பூரண திருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்று கூற முடியாது. இப்போதைக்கு இந்த மாற்றங்களைச் செய்தது சரியாகத் தோன்றினும் மந்திரிசபையைச் சீரமைக்க வேண்டிய காரியத்தை அவர் இன்னும் செய்யவில்லை. ஆயினும் தமது பொறுப்பில் பல அமைச்சுக்களை வைத்திருப்பது மீண்டும் விரைவில் மந்திரிசபையில் புனரமைப்புச் செய்யும் நோக்கத்துடன் தான் என்று பேச்சடிபடுகிறது. இதில் சிறிதளவாவது உண்மையிருக்கலாம்.

ஐ. நா. மகா சபையில் இலங்கைக் கோஷ்டிக்கு தலைமைதாங்கிச் சென்றிருக்கும் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஒரு மந்திரியாகலாமென்றும் அவர் அவசரமாக அழைக்கப்பட்டிருக்கிறாரென்றும் செய்திகள் வெளிவந்தன. 'இலாகா மாற்றங்களுடன்' இப்போதைக்கு நிலைமை சமாளிக்கப்பட்டிருப்பதால் திரு. பொன்னம்பலம் அவசரமாக இங்கு திரும்பவேண்டியேற்படவில்லை. பிரதமர் தமது பொறுப்பில் மூன்று அமைச்சுக்களை வைத்திருப்பதுவும் திரு. பிரேமதாசா இரண்டு அமைச்சுக்களின் பார்லிமெண்டரிக் காரியதரிசிப் பதவிகளை வகிப்பதுவும், 'சரியான சந்தர்ப்பத்தில் சரியான பேர்வழிகளுக்கு அவற்றைப் பங்கிட்டுக் கொடுப்பதற்குத்தான்' என்ற வதந்தி முற்றிலும்

## ஆலயப் பிரவேசத்துக்கு சர்வஜன வாக்கெடுப்பு

### தி. மு. க. பூச்சாண்டிக்கு காமராஜர் பதில்

தவறானதாக இருக்கமுடியாது. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஐ. நா. விலிருந்து திரும்பி வந்தபின் அவர் பொருளாதார, திட்ட மந்திரியாக நியமிக்கப்படலாம் என்று 'ஜனதின' என்னும் எதிர்க்கட்சிப் பத்திரிகை கூறுகிறது. எதிர்க்கட்சிப் பத்திரிகைகள் மந்திரிசபை மாறுதல்பற்றி ஆர்வத்துடன் செய்திகள் வெளியிடுவது நல்லெண்ணத்துடன் தான் என்று கருதமுடியுமா? எனினும் மந்திரிசபையில் திரு. பொன்னம்பலத்தையும் சேர்த்துக்கொள்ள திரு. டட்லி விரும்புகிறார். எந்த அமைச்சு, எப்போது என்ற கேள்விகளுக்கு இனித்தான் பதில் கிடைக்கவேண்டும்.

நடந்து முடிந்த மூன்று உப தேர்தல்களிலும் ஆளும் கட்சிக்குக் கிடைத்த தோல்வியைத் தொடர்ந்தே அரசாங்கம் தனது குறைகளை ஆராய்ந்து அவற்றை நிவர்த்தி செய்ய முயற்சி செய்து வருகிறது. இதில் தவறில்லை.

பல்வேறு அரசியல் கொள்கைகளையுடைய கட்சிகள் சேர்ந்து அமைக்கப்பட்டது தேசிய அரசாங்கம். இந்தக் கட்சிகள் தங்கள் கொள்கைகளையும் இலட்சியங்களையும் கைவிட்டுவிட்டு ஒன்று சேர்ந்தவையல்ல. நாட்டின் நலன் கருதி வேற்றுமையில் ஒற்றுமை காண தேசிய அரசாங்கத்தை அமைத்தன. எனவே கொள்கை கோட்பாடுகளில் வேறுபாடு இருப்பினும் நாட்டின் முன்னேற்றத்தையும் தேசிய ஐக்கியத்தையும் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட அரசாங்கத்தில் - மந்திரிசபையில் - இடையிடையே வேறுபாடுகள் தோன்றுவது இயல்பு. எனினும் இலங்கையில் பொதுவாக அடுத்த தேர்தலைப்பற்றியே அதிகம் கவலை கொள்ளும் அரசியல்வாதிகள் நிறைந்திருப்பதால் தேசிய அரசாங்க மந்திரிகளும் மற்றையோரும் அடுத்த தேர்தலை எதிர்பார்த்து தங்கள் வாக்குகளுக்காக சில வார்த்தைகளை இடையிடையே பேசிவிடுகின்றனர். இது 'மற்றவர்களுக்கு' தேசிய அரசாங்கத்தைப்பற்றிப் பேச 'வாய்ப்பாகி'விடுகிறது.

இனியும் இதே நிலை தொடர்வது அரசாங்கத்துக்கோ, அதில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளுக்கோ, நாட்டுக்கோ நல்லதல்ல. எனவே அதிகம் பேசி அரசாங்கத்துக்குத் தர்மசங்கடத்தை ஏற்படுத்தும் அமைச்சர்களை விடுத்து செயல் வீரர்களைக்கொண்ட மந்திரிசபையே நாட்டுக்கு இன்று தேவை.

#### சேர் ஜோனின் முயற்சி

தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளில் தமிழரசுக்கட்சிக்கே எதிர்ப்பு அதிகம். ஆளும் கட்சிக்குள்ளேயே அதற்கு எதிர்ப்பு இருக்கிறதாம். எதிர்க்கட்சியினர் தமிழரசுக்கட்சிமீது தொடுக்கும் பாணங்கள் கொஞ்சமல்ல. அதற்குக் காரணமும் இல்லாமலில்லை. சென்ற பொதுத் தேர்தல் முடிவடைந்ததும் தமிழரசுக்கட்சியின் உதவியை எதிர்க்கட்சியினர் நாடியபோது உதவியளிக்க அது மறுத்துவிட்டது மட்டுமல்ல, "எல்லாம் தருவோம்" என்று கூறியதையும் ஏற்கவில்லை. "ஜனநாயகத்தைக் காப்பாற்ற" முன்னைய கூட்டரசாங்கத்தின்மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தமிழரசுக்கட்சி ஆதரித்ததும், எதிர்க்கட்சியினர் தமிழரசுக் கட்சிமீது பழிவாங்கத்துடிப்பதற்குக் காரணமாகும்.

தமிழரசுக் கட்சியை தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேற்றிவிட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்கும் ஒற்றுமையேற்படுத்தப் பெரும் முயற்சி நடைபெற்று வந்தது. இப்போது இந்த முயற்சியில் முன்னாள் பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவலை தீவிரமாக ஈடுபட்டுள்ளாராம். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவர்கள் சிலவரை இதுசம்பந்தமாக சேர் ஜோன் கொத்தலாவலை சந்தித்துப் பேசியதாக 'எத்த' என்ற மற்றொரு எதிர்க்கட்சிப் பத்திரிகை கூறுகிறது.

எப்படியும் அரசாங்கத்தில் தமிழர் இருப்பதை சிலசக்திகள் விரும்பவில்லை என்பது தெளிவாகிறது. மந்திரி சபையில் தமிழர் முன்னரே இருந்திருந்தால் தமிழ் மக்களுக்கு இவ்வளவு மோசமான நிலை ஏற்பட்டிருக்காது. மந்திரிசபையில் தமிழரின் பிரதிநிதித்துவம் இன்னும் அதிகரிக்கவேண்டும்.

#### சத்தியாக்கிரகமும் ஆலயப்பிரவேசமும்

தீண்டாமைக் கொடுமையை ஒழிக்க சத்தியாக்கிரக இயக்கம் ஆரம்பிக்கிறுமான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி திட்டமிட்டிருந்தது. யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் மற்றும் சிலரும் எடுத்த முயற்சிகளின் பயனாக சத்தியாக்கிரகத்திட்டம் மேலும் மூன்று மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. மூன்று மாதங்களுக்குள் சைவசமயத் தலைவர்களையும், ஆலய தர்மகர்த்தாக்களையும் ஆலயக்குருக்கள்மாரையும் சந்தித்து நாட்டிலுள்ள சகல ஆலயங்களிலும் சகலரும் எவ்வித பாகுபாடுமின்றி சுவாமி தரிசனம் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு அரசாங்க அதிபர் முயற்சி செய்வார். இந்த அடிப்படையில்தான் சத்தியாக்கிரகம் ஒத்திவைக்கப்படுகிறது.

சுமார் பத்துவருடங்களுக்கு முன்னரே சத்தியாக்கிரகப் பயமுறுத்தலின்றி நல்லூர் கந்தசுவாமி கோவில் வண்ணை சிவன்கோவில், வண்ணை ஸ்ரீவேங்கடேசவரதராஜப்பெருமாள் கோவில் முதலிய பிரசித்திபெற்ற கோவில்கள், சகலமக்களும் எவ்வித பாகுபாடுமின்றி உள்ளே சென்று சுவாமி தரிசனம் செய்வதற்காகத் திறந்துவிடப்பட்டன. இதன் பின் சிறிய கோவில்கள் சில தாமதமாகவே சகலருக்கும் கதவுகளைத் திறந்துவிட்டன. 'சத்தியாக்கிரகம்' என்ற வார்த்தையும் இதற்காக பல பகுதிகளில் நடைபெற்ற பிரசாரக் கூட்டங்களில் சிலர் நிகழ்த்திய உரைகளும் தீண்டாமைக் கொடுமையை ஒழிக்கவேண்டுமென்ற மனப்பான்மை கொண்ட "உயர் சாதித் தமிழர்" சிலரின் மனதையும் புண்படுத்தக்காரணமாக இருந்துள்ளன. "உயர் சாதியினர்" சிலர் விடுத்த அறிக்கைகளும் இதே விளைவை நிதான சிந்தைபடைத்தவர்களின் மனதிலும் ஏற்படுத்தி யிருக்கின்றன. சத்தியாக்கிரகம் ஒத்திவைக்கப்பட்டுவிட்டதால் இந்த மனக்கசப்புகள் நீங்க வழிபிறந்துள்ளதென்று கருதலாம்.

இதனால் சமூகக்குறைபாடுகளை ஒழிப்பதற்கு பலரும் பலவிதத்திலும் முயற்சி செய்ய வாய்ப்பிருக்கிறது. தீண்டாமைக் கொடுமை இந்துசமயத்தில்தான் பெருமளவில் இருப்பதால் இப்பணியில் இந்துக்கள் தான் ஈடுபட முன்வரவேண்டும். இதையே தான் காந்தி மகாத்மா "வைக்கம் சத்தியாக்கிரக" சமயத்தில் தெளிவாகக் கூறினார். இதேசமயம் இப்பிரச்சினையில் அரசியல் கட்சிகளும் கவனமாக செயலாற்றவேண்டும். போட்டி அரசியல் காரணமாக நன்மையான காரியங்களும்

(12-ம் பக்கம் பார்க்க)


ரெனகோல்

மூட்டுவலிகள், கால்வலிகள், கண்களில் அழல்கள், முதுகுவலி, நீர்பிரியும்போது எரிச்சல் உணர்ச்சிகளுக்கு காரணமாக இருக்கும் குண்டிக்காய், மூத்திரப்பை ஆகியவற்றின், சகல கோளாறுகளையும் உத்தரவாதத்துடன் குணப்படுத்தும். குண்டிக்காய்வலி, குண்டிக்காயில் கல் அடைப்பு ஆகியன ஏற்படாமல் ரெனகோல் பாதுகாக்கிறது.

இன்றே ஒரு போத்தலை பரீட்சியுங்கள்
எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கீழ்க்கண்ட விலாசத்திலும் கிடைக்கும்
ஓ. டி. எஸ். லிமிட்டெட், கொழும்பு-3



ஆஸ்த்மா

பரீட்சியுங்கள்
ஆர்கோமெக்ஸ்
(ஓ. டி. எஸ். ஆஸ்த்மா ஒழிப்பு மிக்ஷர்)
துரிதமாக, புதிய நிவாரணம் அளிப்பதை காணுங்கள்.
எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.



தற்பொழுது கட்டுப்பாடின்றி
BAYER
பொலிடோல் பெறலாம்
Agents: றோயல் டிஸ்பென்ஸறி
ஏஜென்ஸாக விரும்புவோர் விண்ணப்பிக்கவும் தகுந்த இடங்களுக்குக் கொடுக்கப்படும்
ROYAL DISPENSARY PHONE: 397 JAFFNA
1393


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மந்திரிசபை மாற்றங்கள்; தேர்தலில் காங்கிரஸ் நிலை

உலக மேடை

எஸ். எம். ஜி.

இந்திய மந்திரி சபையிலிருந்து திரு குல்ஸாரிலால் நந்தா வெளியேறியபின்- வெளியேற்றப்பட்டபின்- மந்திரிசபையில் பெரிய மாற்றங்கள் செய்து புதுப்பித்து அமைத்துக்கொள்ள பிரதமர் திருமதி இந்திரா காந்தி விரும்பியபோதிலும் காங்கிரஸ் அக்ராசனர் உட்பட காங்கிரஸ் 'முக்கியஸ்தர்கள்' அனைவரும் 'மந்திரி சபையைப் புதுப்பித்து அமைக்க இது சமயமல்ல' என்று வற்புறுத்தியதனால் மந்திரிகள் சிலரை 'இடம் மாற்றி' வைத்து நந்தாவின் இடத்தை நிரப்பி நிலைமையைச் சமாளித்திருக்கிறார் இந்திரா.

உணவுப் பற்றாக் குறை முதல் உருக்காலை வரை, பல்வேறு பிரச்சினைகளையும் முன்வைத்து மாணவர்களும் மற்றையோரும் நாட்டின் பல பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்களும் அட்டகாசங்களும் செய்து உயிருக்கும் உடைமைக்கும் சேதம் ஏற்படுத்திவந்ததும் இதன் உச்சக்கட்டமாக புதுடில்லியில் பார்லிமெண்ட் கட்டிடத்தின்முன் பசுவதையைத் தடை செய்யக்கோரி 'சாது'க்கள் நடத்திய கிளர்ச்சிகளின் விளைவுகள் அமைந்திருந்ததும் இதன் எதிரொலியாக உள்நாட்டு மந்திரி பதவிவகித்த திரு. குல்ஸாரிலால் நந்தா பதவியிலிருந்து வெளியேறியதும்பற்றி சென்ற வாரம் குறிப்பிட்டிருந்தேன்.

இதுவரை பாதுகாப்பு மந்திரியாக இருந்த திரு. சவான், திரு. நந்தாவின் இடத்தில் உள்விவகார மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார், மகாராஷ்டிர முதல் மந்திரியாகவிருந்து நாட்டின் நிர்வாகத்தைச் சிறப்புற நடத்தியதும் பின்னர் எல்லைகளில் சீன, பாகிஸ்தான் தாக்குதல்கள் ஏற்பட்டபொழுது அவற்றை வெற்றிகரமாகச் சமாளித்ததும் திரு. சவானின் கரங்கள் 'உறுதியானவை' என்றும் எந்தப் பிரச்சினையையும் அவை சமாளிக்கும் என்றும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. வீர சிவாஜி பிறந்த மராட்டிய மண்ணில் பிறந்தவர் சவான். உள்நாட்டில் அதிகரித்துவரும் ஆர்ப்பாட்டங்களும் கிளர்ச்சிகளும் நாட்டில் சட்டமும் ஒழுங்கும் நிலைபெருமல் அராஜகத்தை வளர்த்துவிடுமென்ற அச்சத்தைத் திரு. சவான் நீக்கிவிடுவாரென நம்ப இடமுண்டு. நந்தா பதவியிலிருந்து விலகி திரு. சவான் அப்பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்பே, சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவும் ஆர்ப்பாட்டங்கள் சம்பந்தமாக உறுதியான நடவடிக்கை எடுக்கவும் ராஜ்ய அரசாங்கங்களுக்கு பிரதமர் இந்திரா தந்தி மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தார். சென்ற சில மாதங்களாக 'நீளக் கயிற்றில்' விட்டுப்பிடித்த தன் வினைகளை அரசாங்கம் மட்டுமல்ல பொதுமக்களும் உணர்ந்துகொண்டதால் திரு. சவான் தமது பொறுப்பை எப்படி நிறைவேற்றுவார் என்று எதிர்பார்க்கத் தேவையில்லை. மாணவர்களின் 'மாபெரும் ஆர்ப்பாட்டம்' ஒன்றை புதுடில்லியில் நடத்துவதற்கு பெரிய அளவில் லோகியாவின் சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி திட்டமிட்டிருந்தது. ஆர்ப்பாட்டத்திற்கு முன்னரே டாக்டர் ராம் மனோகர் லோகியாவையும் அவரது சகாக்களையும், இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், திரு. சவான், கைது செய்து காவலில் வைத்துவிட்டது. இனி அவர் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக கருதலாம்.

திரு. சவானின் பாதுகாப்பு அமைச்சர் பதவியில் இதுவரை வெளிவிவகார அமைச்சராக இருந்துவந்த சர்தார் சுவர்ண்சிங் நியமிக்கப்பட்டிருக்கிறார் சுவர்ண்சிங் இந்திய மந்திரிசபையில் நீண்டகால அனுபவமுடையவர். அவரும் வீரத்தின் விளைநிலமான பஞ்சாபிலிருந்துவந்தவர். திரு. சவானுக்கு அவர் சளைத்தவரல்லர்.

சர்தார் சுவர்ண்சிங் வகித்துவந்த வெளிவிவகார அமைச்சர் பதவியில் இதுவரை கல்வி அமைச்சராக இருந்த திரு. எம்.ஸி. சக்ளா நியமிக்கப்பட்டிருக்கிறார். பிரபலமான வழக்கறிஞராகவும் பின்னர் நீதிபதியாகவும் விளங்கிய திரு சக்ளா, ஐ. நா. மகாசபைக் கூட்டத்துக்கு இந்தியாவின் பிரதிநிதியாகச் சென்று அதுவும் இந்திய - பாகிஸ்தான் எல்லைச் சண்டையின்போது, இந்தியாவின் நிலையை திறமையாக எடுத்துரைத்து மதிப்புப் பெற்றவர். இந்திய அரசாங்கத்தில் பொறுப்பு வாய்ந்த வெளிவிவகார அமைச்சர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள முதல் முஸ்லிமும் திரு. சக்ளாதான். திரு. சக்ளாவின் கல்வி அமைச்சர் பதவி இதுவரை பாசன மின்சக்தி அமைச்சராக இருந்த பக்ருதீன் அலி அகமதிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது இந்த நியமனம் பெற்ற இரு தினங்களுக்குள்ளேயே அலிஅகமதுக்கு மாரடைப்பு ஏற்பட்டபோதும் அதிர்ஷ்டவசமாக அவர் ஆபத்தின்றி தப்பிவிட்டார்.

பசுவதைத்தடை ஆர்ப்பாட்டங்களும் இதர கிளர்ச்சிகளும் மதப்பூசலையும் இனப்பூசல்களையும் கிளப்பி இந்திய அரசாங்கத்தின் கொள்கைகளிலும் நடவடிக்கைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு மறைமுகமான முயற்சிகளுக்குப் பின்னணியில் சில சக்திகள் இயங்கிவரும்போதிலும் திரு. சக்ளாவைப் பொறுப்புள்ள அமைச்சர் பதவியில் நியமித்ததன் மூலம் திருமதி இந்திரா, இந்தியாவுக்கெதிரான சிலரது தவறான பிரசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்.

நந்தா வெளியேறியதோடு இப்போது நிதிமந்திரியாகவுள்ள திரு. சசீந்திர சௌத்திரியையும் வர்த்தக அமைச்சராகவிருக்கும் திரு. மனுபாய் ஷாவையும் வெளியேற்றுவதற்கு திருமதி இந்திரா திட்டமிட்டிருந்தார். உண்மையில் அவர்களிருவரையும் ராஜினாமாசெய்யும்படி கேட்டிருந்தாராம். ரூபாய் நாணய மதிப்புக் குறைக்கப்பட்டபொழுது, அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைச் சமாளிக்க நிதிஅமைச்சர் சௌத்ரியும் வர்த்தக அமைச்சர் மனுபாய்ஷாவும் முன்யோசனையுடன் செயலாற்றத் தவறிவிட்டதால் இன்று வெளிநாடுகளில் இந்திய ரூபாயின் மதிப்பு மேலும் குறைவடைந்து வருகிறதென்றும் ஏற்றுமதி வர்த்தகம் குறைந்துவிட்டதென்றும் இந்திரா கருதுகிறார். இதனால் தான் அவர்களிருவரையும் வெளியேற்றத்திட்டமிட்டார்.

ஆனால் பொதுத்தேர்தலுக்கு இன்னும் இரண்டு மாதங்களே இருப்பதால் இதற்குள் மந்திரிசபையில் பெரும் மாற்றங்கள் செய்வது ஆளும் கட்சியை அடுத்த தேர்தலில் பலவீனப்படுத்துவதற்கு ஏதுவாக அமையுமென்பது காங்கிரஸ் தலைவர் காமராஜரினது கருத்து. ஒரிஸ்ஸா ராஜ்யத்தில் காங்கிரசுக்குள் பிளவு ஏற்பட்டு மந்திரிகள் பலர் கூட்டாக ராஜினாமா செய்யப்போவதாகப் பயமுறுத்தியபொழுது. தேர்தல் வரும் இச்சமயத்தில் எந்த மந்திரிசபையிலும் இப்போது மாற்றம் செய்யமுடியாது என்று காமராஜர் மறுத்திருந்தார். மத்திய மந்திரி சபையில் இப்போது மாற்றம் செய்வதை அவர் விரும்புவாரா? மந்திரிசபையிலிருந்து விடுபட்ட முன்னாள் பாசன மந்திரி ஹுமாயூன் கபீர் காங்கிரசிலிருந்து வெளியேறி போட்டிக்காங்கிரஸில் சேர்ந்துகொண்டு காங்கிரஸின் குறைகளை எடுத்துக்காட்டித் திட்டிக்கொண்டிருப்பது போதாதா? என்றாலும் மந்திரிசபையில் சௌத்ரியும் மனுபாய்ஷாவும் இனித்திருப்தியோடு இருப்பார்களென்று எதிர்பார்க்கமுடியுமா?

மந்திரி சபையிலிருந்து வெளியேற்றப்படவேண்டிய நிலைக்குவந்துவிட்டபின்னர், வேறு எந்தக்காரணத்துக்காகவோ தங்களை வெளியேற்றாமல் வைத்திருப்பதை அறிந்துகொண்டபின்னர் அவர்களுடைய ஒத்துழைப்பு திருமதி இந்திராவுக்குக் கிடைக்குமென்று எதிர்பார்க்கமுடியாதுதான். ஆனாலும் இந்திய மந்திரிசபையில் இப்பொழுது பூரண ஒத்துழைப்பு நிலவுகிறதா என்ற கேள்விக்கும் இடம் உண்டு. நேரு இருக்கும்பொழுது இருந்த கட்டுப்பாடும், கட்டுக்கோப்பும் இல்லை. அப்படி எதிர்பார்த்தால் நேருவுக்கும் மற்றவர்களுக்கும் என்ன வித்தியாசம்? மந்திரிகளுக்குள் ஒற்றுமையில்லாதது மட்டுமல்ல மந்திரிகளுக்குள்ளும் அவர்களின் கீழுள்ள அமைச்சக அதிகாரிகளுக்குள்ளும் கூட ஒத்துழைப்பு இல்லையென்பது நந்தா தமது ராஜினாமாவோடு விடுத்த அறிக்கையிலிருந்து தெளிவாகிவிட்டது. மந்திரிகளுக்குள்ளேயே பதவிப் போட்டியும் காங்கிரசுக்குள்ளேயே அதிகாரப் போட்டியும் அதிகரித்து விட்டது. இதைக் காங்கிரஸ்காரர்களே ஒப்புக் கொள்கின்றனர்.

ராஜ்யங்களுக்கிடையில், எல்லைத்தகராறு. ராஜ்யஅரசாங்கங்களில் காங்கிரஸ்காரர்களுக்குள்ளேயே கோஷ்டிச் சண்டைகள், இவற்றுடன் உணவுப்பற்றாக்குறையைநீக்கவேண்டுமென்றும், உருக்காலை வேண்டுமென்றும், பசுவதையைத் தடைசெய்ய வேண்டுமென்றும், மாகாண சுயாட்சி வேண்டுமென்றும் எதிர்க்கட்சியினருடன் காங்கிரஸ்காரரும் சேர்ந்து கிளர்ச்சிகளுக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும் ஆதரவும் ஒத்துழைப்பும் அளித்து வருகின்றனர். இதே சமயம் நாகாலந்தில் நாகர்களும், மிஸோ மலைஜாதியினரும் தனிராஜ்யம் கோரி நாசவேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். எல்லைகளில் சீனர் அபாயமும், பாகிஸ்தானியர் தொல்லையும் முற்ருக நீங்கிவிடவில்லை.

இத்தனை கஷ்டங்களுக்கிடையிலும் தொல்லைகளுக்கிடையிலும் காங்கிரஸ் ஆட்சிபீடத்திலிருந்து ஆட்சி செய்துவருகிறது. ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டும் வருகிறது. இத்தனைபிரச்சினைகளையும் இந்திராகாந்தி என்னும் ஒரு பெண் தாங்கிக்கொண்டு சமாளித்துவருகிறார்.


சென்றசில மாதங்களாக இந்தியாவின் உள்ளே நடந்து

(10-ம் பக்கம் பார்க்க)

மற்றவர்களை முந்திச் செல்ல

BSA

பி. எஸ். ஏ
கோல்டின் டிலக்ஸ்
ரேட்ஸ்டர் சைக்கிள்களையே
தெரிவு செய்யுங்கள்



- உலகிலேயே மிகச் சிறந்த சைக்கிள்
- நீடித்த உறுதி வாய்ந்தது
- வசதிக்கச் சாதகமான அமைப்பு
- 'டெரி-டைப்' சீட்டுகள்

துரிதமான பாதுகாப்பான ஓட்டத்துக்கு
ஒரு பி. எஸ். ஏ. யில் செல்லுங்கள்

ஏகவிநியோகஸ்தர்கள்:
கார்கில்ஸ் (இலங்கை) லிமிடெட்

## ஈழநாடு சைக்கிள் ஓட்டப்போட்டி

'ஈழநாடு' பத்திரிகையின் ஆதரவில் நடைபெறவிருக்கும் பி. எஸ். ஏ. சைக்கிள் பந்தய ஓட்டம் 1967 ம் ஆண்டு ஜனவரி முதல்தேதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும். 18 வயதுக்குட்பட்டவர்களுக்கும், வயதுவந்தவர்களுக்கும் என இரு ஓட்டங்கள் உண்டு. இந்த ஓட்டங்களில் முதலாம் இடத்தைப் பெறுபவர்களுக்கு பி. எஸ். ஏ. சைக்கிள் பரிசாக வழங்கப்படும். வேறு பரிசுகளும் உண்டு.

'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும் கூப்பன்களில் மட்டும்தான், பந்தயங்களில் பங்குபற்ற விரும்புவோர் விண்ணப்பிக்கலாம். அத்துடன் பி. எஸ். ஏ. சைக்கிள் மட்டும்தான் இந்தப்பந்தய ஓட்டங்களில் பங்கு பெற முடியும் என்பதையும் வாசகர்களுக்கு அறிவிக்கிறோம்.

விபரங்களுக்கு: 'ஈழநாடு' பத்திரிகையைப் படியுங்கள். கூப்பன்கள் வெகு விரைவில் எமது பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அயல் நாடுகளில் சைவம்-21

# பாம்பு வணக்கம்

**ந. சி. கந்தையாபிள்ளை**

பாம்பு வணக்கம் இந்தியா, இலங்கை முதலிய நாடுகளிற் காணப்படுகின்றது. நாகதம்பிரான், நாகம்மாள் முதலிய பெயர்கள் பாம்பு வணக்கம் சம்பந்தப்பட்டவை. உலகின் பிறவிடங்களிலும் அது இருந்துவருகின்றது. பல நாடுகளில் அது மறைந்துவிட்டது. பாம்பு வணக்கம் எப்படித் தோன்றியதென்பதைப் பற்றித் திடமாகக் கூறமுடியாது. இதன் தொடக்கத்தைப்பற்றிப் பலர் பலவாறு கூறியிருக்கின்றனர். அவர்கள் கூறிய காரணங்களெல்லாம் அவர்களின் ஊகங்களாகும். விட்டுணு பாம்பணைமீது துயில்வதாகப் புராணங் கூறுகின்றது. சிவபெருமான் அணிந்திருப்பது பாம்பாரணம். முருகக் கடவுளின் ஊர்தியாகிய மயில் மிதித்து நிற்பது பாம்பு. ஆதாம் ஏவாள் என்னும் ஆதித்தாய்தந்தையரோடு சம்பந்தப்பட்டிருப்பது பாம்பு. அரைக்குக்கீழ் பாம்புவடிவும், அரைக்கு மேல் மனித வடிவுமுடைய நாகர் என்னும் தேவர்களைப் பற்றிப் புராணங்கள் கூறுகின்றன. ஓமகுண்டத்தினின்றும் எழுந்த பாம்பைத் தாராகவனத்து இருடிகள் சிவபெருமான் மீது ஏவ அவர் அதனை எடுத்து ஆபரணமாக அணிந்துகொண்டாரெனப் புராணங் கூறுகின்றது.

"பாம்புவணக்கம் எகிப்து, பாலஸ்தீனம், தயர், பாபிலோனியா, காஷ்மீரம், இந்தியா, சீனு, திபெத்து, மெக்சிக்கோ, பேரு, அபிசினியா முதலிய நாடுகளிலும், பொதுவில் ஆபிரிக்காக் கண்டம் முழுமையிலும் பரவியிருந்தது. இலங்கை, ஜாவா முதலிய தீவுகளில் அது இன்றும் இருந்துவருகின்றது. பியூசித்தீவு மக்களிடையும், ஓசேனியாவின் பல பகுதிகளிலும் காணப்படுகின்றது. கெல்தியர், ஸ்காந்திநேவியர், பாரசீகர், அராபியர்களிடையும் இது பரவியிருந்தது. சில இடங்களில் பாம்புச் சிலைகளுக்குப் பதில் உயிர்ப் பாம்புகளும், வேறு சில இடங்களில் எல்லாப் பாம்புகளும் வழிபாட்டுக்குரிய மதிப்புப் பெற்றிருந்தன. அபிசீனியநாட்டின் முதல்அரசன் பாம்பினின்றும் தோன்றியவனெனக் கூறும் பழங்கதையுள்ளது. வேறு நாட்டில் பாம்பு வணக்கமும் ஞாயிறு வணக்கமும் ஒன்று சேர்ந்திருந்தன."-1

"மோசே வெண்கலத்தினால் பாம்பு உருவம் செய்து வைத்தார். அது எசாக்கியேல் காலம்வரை எருசலேமில் வழிபடப்பட்டது."-2

"தாமரை மலரும் பாம்பும் எகிப்தில் சமயசின்னங்களாகவிருந்தன. இச்சின்னங்கள் ஆதியில் இந்துக்களிடமிருந்து வந்தனவென்பதை அவை தெரிவிக்கின்றன. கிர்சே என்னுமிடத்திற் காணப்படும் எகிப்தியரின் பழங்காலக் கோயிலில் சகந்நாதர், கணேசர் உருவங்களை ஒத்த சிற்பங்கள் காணப்படுகின்றன."-3

"படமெடுக்கும்பாம்புஇந்தியாவைச்சேர்ந்தது. இதனை இந்திய மக்கள் சமய சின்னமாகக் கொண்டனர். இந்தியாவினின்று அது எகிப்துக்கும், எகிப்தினின்று பினிசியாவுக்கும்பின் கிரீசுக்கும்உரோமுக்கும் பரவிற்று. பாம்புச் சின்னங்கள், கிரேக்கர், உரோமர்களின் ஆபரணங்களிற் காணப்படுகின்றன.

"மோசேயால் செய்து வைக்கப்பட்ட வெண்கலப் பாம்பு யேகோவாக் கடவுளின் அருட்குறியாக நீண்ட காலம் வழிபடப்பட்டது. இந்தியாவில் படமெடுக்கும் பாம்பு ஞாயிற்று வழிபாட்டோடு தொடர்புபெற்றிருந்தது. ஞாயிற்றினின்றும் தோன்றியவர்களெனக் கூறிக்கொள்ளும் மக்களின் குலக்குறியாக (Totem) அது இருந்தது. ஒன்றிலொன்று அதிக தொலைவிலிருக்கும் சீனு, பேரு, ஆபிரிக்கா முதலிய நாடுகளிலுள்ள பாம்பு வழிபாடு மற்றைய நாடுகளின் தொடர்பின்றித் தனி முறையில் தோன்றியதெனக் கூறமுடியாது. சிவ வழிபாட்டில்வழிபடும்முறை ஒரு நாட்டிற் காணப்படுவதுபோலவே மற்றைய நாடுகளிலும் காணப்படுகின்றது. ஆகவே சூரிய குலத்தினர் எனக்கூறிக்கொண்ட ஒரு குலத்தவரின் மத்தியிலிருந்து இவ்வழிபாடு நாலு திசைகளிலும் பரவியிருக்க வேண்டும்." 4

ஆதாரம்:


1. Studies in ancient history -John Ferguison.
2. E. Britannica.
3. The symbolic language of ancient art and mythology -Payne Knight.
4. Sun and the serpent -Oldham.


குறள் விளக்கம்

# சான்றோர் பழிக்கும் வினை

— பொ. சண்முகநாதன் —

இந்த உலகிலே நாம் முதலாவதாகத் தாயை மதிக்கிறோம். ஆனால் அந்தத் தாய்க்காக பழிச் செயல்களைச் செய்துவிடலாகாது என்கிறது வள்ளுவம். ஏன் நல்ல ஒரு தாய்கூட தனது வயிற்றை வளர்ப்பதற்காக தனது மகன் பழிச் செயலை மேற்கொள்வதை விரும்பமாட்டாளே!

'ஈன்றாள் பசிகாண்பாள்
ஆயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை'

பெற்ற தாய்தான், ஒருவனது சிறந்த—உயர்ந்த செல்வம். அவளைப் பட்டினிபோடாது மகிழ்ச்சியோடு இருக்கும்படி செய்வதுதான் ஒரு மகனது முதல் கடமையும் முக்கிய கடமையுமாகும். பெற்ற தாய் பிச்சை எடுக்க மகன் கும்பகோணத்தில் கோதானம் செய்வதில் பயனில்லை.

ஈன்றாள் பசி காணக்கூடாதே என்பதற்காக மகன் ஏதாவது வினை மேற்கொள்ளவேண்டும். தாயின் பசியைப் போக்கமாட்டாத மகன் இருந்தென்ன இறந்தென்ன? ஆனால்—

இத்தனை சிறந்த-உயர்ந்த செல்வமான தாய் பசி காணக்கூடாது என்பதற்காக மகன் எதையும் செய்துவிடலாம் என்பதும் தவறு. சான்றோர்கள் பழிக்கும் செயல்களை தாய் பசியால் வருந்துகிறாள் என்றால் கூட மகன் செய்துவிடக் கூடாது. அப்படியான சந்தர்ப்பத்தில், பயன் குறைந்ததுதான் என்றாலும் வேறு வினைகளைத் தேடிச் செய்தலே நன்று.

சாதாரண மக்களுக்கும் சான்றோர்களுக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. சாதாரண மக்கள் பழிக்கும் செயக்களுக்கும் சான்றோர் பழிக்கும் செயல்களுக்கும் கூட நிறைய வேறுபாடுகள் உண்டு. சான்றோர் பழிக்கும் செயல்கள் சில, சாதாரண மக்களால் எள்ளி நகையாடப்படவும் கூடும். இருந்தாலும் சான்றோர்களைப் பின்பற்றினால்தான் மக்கள் உய்வார்கள்-உயர்வார்கள்.

காலத்துக்குக்காலம் மக்கள் மத்தியில் சான்றோர்கள் தோன்றுவர்கள். அவர்கள் இது கொள்ளத்தக்கது, இது தள்ளத்தக்கது, இது பின்பற்றக் கூடியது இது பின்பற்றக்கூடாதது என்றெல்லாம் வகுபடுத்திக் கூறுவார்கள். அவர்கள் கொள்ளத்தக்கது என்றும் பின்பற்றக் கூடியது என்றும் சொல்பவைகளையே மக்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்படி ஏற்றுக்கொள்ளாதவர்கள் சான்றோர் பழிக்கும் வினைகளை மேற்கொண்டவர்கள் என்று கருதப்படுவார்கள்.

சான்றோர் புகழும் வினைகளைச் செய்வதைவிட, பழிக்கும் வினைகளைச் செய்வதால் சில வேளை செய்பவர்களுக்கு அதிக பயன் கிடைக்கலாம்; ஆனாலும் அவைகளைச் செய்யக்கூடாது. அதற்குப் பல காரணங்கள் இருக்கும். அச்செயலால் அவனே அல்லது அவனது இனமோ அக்காலத்தில் இல்லாவிட்டாலும் எதிர்காலத்தில் அடிமைப்படவோ ஆபத்தில் அகப்படவோ நேரலாம் என்றாலும் சான்றோர் அச்செயலைப் பழிப்பார்கள்.

தாய் பசி காண்கிறாளே, அதைப் போக்கவேண்டுமே என்பதற்காக நாம் சான்றோர் பழிக்கும் எச்செயலையும் செய்துவிடலாகாது என்கிறார் வள்ளுவர்.

## வரப்பெற்றோம்

விவேகி (இலக்கியத் திங்கள் இதழ்-ஒக்டோபர்) 29, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

கலைச்செல்வி ஐப்பசி இதழ் 20, டானியல் வீதி, யாழ்ப்பாணம்.

மல்லிகை (கலை இலக்கிய மாத இதழ்-நவம்பர்) 60, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# நமது நூல் நிலையம்

**நெஞ்சில் நிறைந்தவள்**

ஆசிரியர்: சீ. சிவஞானசுந்தரம். கிடைக்குமிடம்: ஸ்ரீகாந்த கமல பவனம், ஏழாலை மேற்கு, சுன்னுகம். விலை: 1 ரூபா 25 சதம்.

ஆசிரியர் சீ. சிவஞானசுந்தரத்தின் 'நெஞ்சில் நிறைந்தவள்' சமூக நாவல் பணம், பதவி, அந்தஸ்து உடைய ஒரு சிலர் சமூகத்தை ஆட்டி வைத்து அப்பாவிகளை அநியாயமாகச் சித்திரவதை செய்வதை ஆசிரியர் அம்பலப்படுத்தவிரும்புகிருர். உயர்ந்த குறிக்கோளின் அடிப்படையில் நாவல் வரையப்பட்டுள்ளது.

சங்கிலித் தொடர்ச்சி போல் கதை தொடர்புகள் தொடர்ந்திருந்தால் இந் நாவல் விறுவிறுப்பாக அமைந்திருக்கும்.

**பாவையின்பரிசு** ஆசிரியர்: துரை. மனோகரன். கிடைக்குமிடம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம். விலை: 2 ரூபா 50 சதம்.

இன்று நம் வாழ்க்கையில் அன்றாடம் காணும் காட்சிகளை துரை. மனோகரன் அழகான நாவலாக உருவாக்கியுள்ளார்.

கொலை செய்யாத ஒரு அப்பாவி கொலையாளி என்ற பெயருடன் சிறைக்குத் தள்ளப்படுகிறார். அவரது மகள் கொலைகாரன் மகளாகப்பட்டம் சூடியிருப்பதுடன் சமுதாயத்தைச் சிரழிக்கும் சீதனம் இல்லாமல் கன்னியாகக் காலம் கழிக்கிறாள். அவளது தந்தையின் நண்பர் கந்தையா தனது அயரா உழைப்பால் சிறந்த இலட்சியவாதி ஒருவருக்கு அவளைத் திருமணம் செய்து வைக்கிறார்.

> [மதிப்புரை வேண்டுவோர் ஒவ்வொரு புத்தகத்திலும் இரு பிரதிகள் அனுப்பவேண்டும்.]

கருவாக்காட்டிலே செல்வத்திலே புரளும் இன்னும் ஒரு தந்தை தனது மகளிற்கு பெரிய செல்வந்தரை மணமுடித்துவைக்கிறார். ஆனால் கண்கள் குளமாக அவரைக் கைப்பிடித்த செல்வச்சீமாட்டியின் அவலக்குரல்; 'கறுப்புச் சூட்டும் கோட்டு'மாக வந்திருந்தார். அதை அழகென்று எண்ணிக்கொண்டேன். ஆனால் அதைப் போன்றுதான் அவரது மனமும் என்பதை அறியமுடியவில்லை. கையிலே லாவகமாகச் சிகரட் பிடித்துக்கொண்டிருந்தார். அதையே சிறந்த நாகரீகச் செயல் என எண்ணிக்கொண்டேன். ஆனால் அவர் அந்தச் சிகரெட்டை ஊதிப்புகைப்பது போலத்தான், பின்னால் என்னையும் உதறித்தள்ளுவார் என்பதை அறியமுடியவில்லை' என்றெல்லாம் போலி நாகரீகத்தின் வேடத்தை ஆணிவேறு அக்குவேறாகப்பிரித்துக்காட்டுகிறது. இருவேறு கோணத்திலுள்ள இரண்டு குடும்பங்களை மையமாக வைத்து "பாவையின்பரிசு" பின்னப்பட்டுள்ளது. சீதனம் ஒழிக்கப்படவேண்டும்; பெற்றோர் தமது பெண்குழந்தைகட்கு திருமணம் செய்யும்போது பணத்தை மட்டுமன்றிக் குணத்தையும் கவனிக்க வேண்டும். 'பெண்கள் திருந்த வேண்டும்' என்று கூச்சல் போடுவதை விடுத்து 'ஆண்கள் திருந்தவேண்டும்' என்று கோஷம் எழுப்புதல் வேண்டும். மொட்டைக் கடிதங்களை நம்பி வாழ்க்கையில் புயலை எழுப்பக்கூடாது. ஊர்வம்பு சமுதாயத்தில் உள்ள நல்ல உள்ளங்களைப் புண்ணாக்கும் தன்மையுடையது. அதனைச் சமுதாய நலன்கருதி ஒழிக்கவேண்டும். இத்தகைய உயர்ந்த குறிக்கோள்கள் கதையில் பளிச்சிடுகின்றன.

பாவையின் பரிசில் கேட்கும் பாவையவின் பரிதாபக் குரல்கள் சமுதாயத்தின் எதிரொலியாகும். இதனை ஒருவர்மட்டும் கேட்டால் போதாது. சமுதாயத்தில் உள்ள ஆண்கள் அனைவரும் கேட்கவேண்டும் என்ற நோக்குடன் கதாசிரியர் துரை மனோகரன் இதனைப் படைத்துள்ளார். ஆசிரியரின் இக்கன்னிப் படைப்பில் காணப்படும் உயர்ந்த கருத்துக்கள் ஆற்றொழுக்குப் போன்ற தொடர்பான எழுத்தோட்டம் எதிர்காலத்தில் அவர் ஓர் எழுத்தாளனாகத் திகழ்வார் என்பதற்குச் சிறந்த அறிகுறிகளாகும்.

—பூரணி

> 'உன் நண்பர்கள் யாரென்பதை எனக்குக் காட்டு. அவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்பதை அறிந்தபின் நீ எப்படிப் பட்டவன் என்பதை நான் கூறுகிறேன்.
>
> ஃ
>
> பெண்ணானவள் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளமுடியாவிட்டால் அவளை வேறு யாரும் காப்பாற்றமுடியாது. அவளைக் காப்பாற்ற யாருக்கும்—தாய்க்கும் கூட உரிமை இல்லை.
>
> ஃ
>
> 'பிறரைச் சீர்திருத்தும் கடமையைவிட தன்னைச் சீர்திருத்துவதே முதற் கடமை'
>
> —பெர்னுட்ஷா


**சலக்கழிச்சல்**

நோய்சம்பந்தமான சொறி, சிரங்கு, தேமல், கரப்பன் முதலியன குணப்படுத்த உத்தரவாதம்.

**சச்சிதானந்தா வைத்தியசாலை**

சித்திரன் அம்பாள் கோவிலடி, அன்னுலை வடக்கு, கரவெட்டி P. O.



# கிரீக்கோ சூப்பர் கோப்பி

## கொழும்பு ஜோன் கிரீன் அன்ட் கம்பனியாரின்

உற்பத்தி

கவர்ச்சியூட்டும் பைக்கற்றுகள்! அதி நறுமணம் கொண்டது!

மறக்கவே முடியாத ருசியுடையது! நிதான விலை!

கொழும்பில் உள்ள கிரீக்கோ கைத்தொழில் நிலையத்தில் விசேஷ தயாரிப்பு முறைகளைக் கையாண்டு வறுத்து அரைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்:

**M. M. T. P.**

[illegible], ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லதா

## இவ்வாரச் சிறுகதை

சில்வா வீட்டுப் படியில் காலெடுத்து வைக்கும்போதே உள்ளிருந்து பேச்சுக்குரல் கேட்டது. அவர் மனைவி லதாவும், அவளது தோழி நந்தாவும்தான் பேசிக்கொண்டிருந்தனர்.

"...லதா! இது கற்பனையோ இல்லையோ.. அதைப் பற்றிக் கவலைவேண்டாம்... அருமையாக எழுதியிருக்கிறாய்.. சும்மா சொல்கிறேன் என்றுஎண்ணாதே.. கட்டாயமாக இந்த நாவலைப்புத்தகமாகப் போட்டாகவேண்டும்.."

"...இல்லை நந்தா...எனது மனச்சாந்திக்காகத்தான் இதை எழுதினேன்... உனக்குத் தெரியும்தானே... இதைப் புத்தகமாக வெளியிடுவதுபற்றி நான் எண்ணவேயில்லை..."

"உனக்கு எண்ணமில்லாவிட்டாலென்ன, நாங்கள் எல்லோரும் சேர்ந்து இதைப் புத்தகமாகப் போட்டேதீருவோம்..."

இதெல்லாவற்றையும் கேட்ட சில்வாவுக்குச் சிரிப்புத்தான் வந்தது. 'சே! வைத்தியங்கள்! நேரத்தை வீணடிக்கிறார்கள்... கதையும் நாவலும்...வேறு வேலையில்லைப்போலிருக்கிறது...' என்று எண்ணியபடியே தனது அறைக்குப் போய்விட்டார்.

சில்வாவின் மனைவி லதா ஒரு ஆசிரியை. பொழுதுபோக்காகக் கதைகள், கட்டுரைகள் எழுதுவாள். அவை எல்லாம் அடிக்கடி பத்திரிகைகளில் பிரசுரமாகிக் கொண்டிருக்கும். ஆனால் சில்வாவுக்கு இதிலெல்லாம் ஈடுபாடில்லை. லதா எழுதிய ஒரு கதையைக்கூட அவர் படித்திருக்கமாட்டார். அவர் ஓர் அரசாங்கக் குமாஸ்தா. அவருக்குத் தனது வேலையில்கூட அவ்வளவு அக்கறையில்லை என்று சொல்லலாம். உதைபந்தாட்டம், சீட்டாட்டம், 'பியர்' இவைகள் என்றால் போதும்; வேறெதுவும் அவருக்குத் தேவையில்லை. புத்தகங்கள், பத்திரிகைகள் என்று ஏதாவது படித்தால் அவை 'சைகாலஜி', 'ஹிப்நாடிஸம்' சம்பந்தப்பட்டவையாகத்தானிருக்கும். அவர் உலகம் வேறு. லதாவின் உலகம் வேறு.

ஆனால் சில்வாவின் தம்பி நிமால்மட்டும் லதாவுக்கு எந்நேரமும் இந்த எழுத்து விஷயத்தில் ஊக்கம் கொடுத்துவந்தான். லதாவும், நிமாலும் எந்நேரமும் ஏதாவது பேசிக்கொண்டேயிருப்பார்கள். இவர்கள் இருவருக்கும் வைத்தியக்காரப் பட்டம் கட்டுவதுதான் சில்வாவுக்கு வேலை. ஆனால் அந்த நிமால் இப்போது இல்லை. என்ன காரணமாகவோ ஐந்து மாதங்களின் முன் நிமால் தற்கொலை செய்துகொண்டான். ஏன் அப்படித் தற்கொலை செய்துகொண்டான் என்று சில்வாவுக்கோ, மற்றவர்களுக்கோ தெரியாது. லதாவுக்கு உலகமே வெறுத்துவிட்டமாதிரிப் போயிருந்தது. சில்வாவுக்கும் பெரிய இடிதான். என்றாலும் அவர் கவலைதேய்ந்து கொண்டிருந்தது...

ஃ ஃ ஃ

லதா எழுதிய 'தாங்காத மனம்' என்ற அந்த நாவல் வெளியானது. நந்தாதான் வெளியீட்டுவிழாவை பெருமுயற்சியெடுத்து நடாத்தி வைத்தாள். லதா ஆசிரியையாகப் பணிபுரியும் பாடசாலை ஆசிரியர்கள் எல்லோருமாகத்தான் பணமிட்டு இக்காரியத்தைச் செய்து வைத்தனர். ஏதோ போகவேண்டுமென்பதற்காகச் சில்வா இந்த வெளியீட்டு விழாவுக்குப் போய்விட்டு வந்தார்.

லதாவின் 'தாங்காத மனம்' வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. ஏராளமான பாராட்டுதல்கள் லதாவுக்குக் கிடைத்தன. ஆனால் என்னவோ லதாவின் முகத்தில் அவ்வளவு திருப்தியோ, மகிழ்ச்சியோ தெரியவில்லை. சில்வாவைப் போட்டு நண்பர்கள் பிய்த்து எடுத்து விட்டார்கள்.

"சில்வா! உன் மனைவியே அப்படியே உணர்ச்சிகளைக் கொட்டி எழுதியிருக்கிறாளடா..."

"இம்மாதிரியான உணர்ச்சிப் பிடிப்புகளை வைத்து யாருமே கதை பண்ணியது கிடையாது. லதா கெட்டிக்காரி. சில்வா! நீ ஒரு பாக்கியசாலி..."

"கதை எழுதியது மனைவிதான் என்றாலும், ஆண்கள் வட்டாரத்தில் சில்வா திக்குமுக்காடிப்போனார். என்ன இருந்தாலும் 'இன்னவள் புருஷன்' என்ற தோரணையில் பெயரெடுப்பது தனது கௌரவத்துக்கு ஏற்றதாயில்லை என்றமாதிரியும் வருந்தினார் சில்வா. இப்படி எல்லோரும் பாராட்டும்படி லதாவின் கதை அவ்வளவு அற்புதமானதுதானா என்று எண்ணத்தொடங்கினார் அவர். அவர் அந்த நாவலை முன்பு படிக்கவேயில்லை.

எப்படியாவது மனதை ஒரு நிலைப்படுத்தி லதாவின் நாவலைப் படித்துப்பார்த்துவிடுவதென்ற தீர்மானத்துடன்தான் அன்று வேலையிலிருந்து வீடு திரும்பினார் சில்வா. வீட்டுக்கு வந்தவர் படுக்கையறையினுள் சென்றார். அங்கே லதா படுக்கையில் குப்புறப்படுத்திருந்தாள். அரவங்கேட்டுத் தலையை நொடித்து நிமிர்த்திய லதாவின் முகத்தைப் பார்த்தார், சில்வா. அவளது முகம் சிவந்துபோயிருந்தது. சற்றுமுன் கன்னங்களிலோடிய கண்ணீரோடையின் படுகைகள் பளிச்சென்று தெரிந்தன. விவரிக்க முடியாதவொரு விசனம் அவள் முகத்தில் கப்பியிருந்தது. லதா கணவனுடைய முகத்தையொரு முறை கூர்ந்து நோக்கிவிட்டு மீண்டும் தலையைத் தலையணையில் புதைத்துக்கொண்டாள்.

பாடசாலையில் யாராவது சிறிய மாணவிக்கு அடித்துவிட்டோ, ஏசிவிட்டோ வீட்டுக்கு வந்து அதை நினைத்து லதா கவலைப்பட்டு அழுவதுண்டு. அவ்வளவு இளகிய மனமும், ஏங்குகிற சுபாவமும் அவளுக்கு. அவளுக்கு ஆசிரிய வேலை லாயக்கற்றது என்று இப்படியான சமயங்களில் சில்வா கேலிசெய்வதுண்டு.

பாடசாலையில்தான் ஏதோ நடந்திருக்கவேண்டும் என்று எண்ணிய சில்வா உடைகளை மாற்றியபின் மேசைமீது இருந்த 'தாங்காத மனம்' நாவலின் பிரதியொன்றை எடுத்துக்கொண்டு தனது ஆபீஸ் அறைக்குச்சென்றார். இன்று எப்படியாவது நாவலைப்படித்தே தீருவது என்ற எண்ணம் அவருக்கு.

சற்றுச்சிரமத்துடன் படிக்கஆரம்பித்தார். ஆனால் போகப்போகச் சூடு பிடித்துக்கொண்டது. இப்போதுதான் ரசனை அவர் பங்கில் திரும்பியது. நேரம்போய்க்கொண்டிருந்தது. ஒருவித ஆச்சரியத்துடன் அசையாமல் இருந்து படிக்கிறார் சில்வா. நேரம் இரவு பத்தரைக்கு மேலாகிவிட்டது. சாப்பாட்டைப் பற்றியோ, வேறெதைப்பற்றியோ கவலைப்படாதவராய் நாவலின் இறுதிக்கட்டத்தில் லயித்திருக்கிறார்.

"கணவனும் மனைவியுமாக இருவர் இருக்கின்றார்கள். [illegible]வுப் பசியைத் தீர்த்துக்கொள்ள முடியாதவள் இன்னொரு இளைஞனுடன் தொடர்பு வைத்துக்கொள்கிறாள். அந்த இளைஞன் இவளிலிருந்து வயதில் எவ்வளவோ சிறியவனாயிருந்தும் அவள் மீது உயிரையே வைத்துவிடுகிறான். அவளுக்கும் இளைஞன் மீது வெறி மிகுந்த ஒரு பற்றுதல். ஆனால் அதே நேரத்தில் அவளால் கணவனையும் வெறுக்கமுடியவில்லை "கணவன்மீது உயிர், இளைஞன் மீது ஆசை' என்ற அளவில் அவளது மனநிலை இருந்து வருகிறது. தன்னுடன் இவளை எங்காவது ஓடிவந்துவிடும்படிவேண்டுகிறான் இளைஞன். இவளுக்கோ இளைஞன்மீது எவ்வளவோ ஆசை-வெறியிருந்தும் கணவன் மனைவி என்ற பந்தத்தை அறுத்தெறியத் தைரியமில்லை. அவளுக்கு அந்தப் பந்தத்தின்மீது ஒருபிரேமை மயக்கம். அதே நேரத்தில் இளைஞனது தொடர்பை விட்டுவிடவும் இஷ்டமில்லை. இருதலைக்கொள்ளி எறும்பாகத்துடிக்கிறாள் தன்னுடன் வந்துவிடும்படி இளைஞன் அவளை வற்புறுத்துகிறான். இவள் ஏதோவெல்லாம் சொல்லிச் சமாளித்துவருகிறாள். தனது வேண்டுகோள் அசட்டை செய்யப்படுவதைக்கண்ட இளைஞன் தாங்காத மனத்தினனாய் தற்கொலை செய்துகொள்கிறான்"

இதுதான் கதை. இதை வைத்து அருமையான நடையில், உணர்ச்சிமயமான கட்டங்களை எழுப்பி, நாவலை அற்புதமாகப் படைத்திருந்தாள் லதா.

நாவலைப் படித்து முடித்த சில்வாவுக்கு உடலெல்லாம் வியர்த்துக்கொட்டியது. அவர்மனதில் பெரியதொரு போராட்டம். இரண்டு கைகளாலும் தலையை அழுத்திப் பிடித்துக்கொண்டு கடுஞ்சிந்தனையிலாழ்ந்தார். 'சைக்கோலஜி' மூளைவேலைசெய்தது. அவரை ஏதோவொன்று பிடுங்கித் தின்றுகொண்டிருந்தது.

"உன்மனைவி அப்படியே உணர்ச்சிகளைக்கொட்டி எழுதியிருக்கிறாளடா."

"இந்தமாதிரி உணர்ச்சிப் பிடிப்புகளை வைத்து யாருமே கதை பண்ணியதில்லை...... லதா கெட்டிக்காரி!"

நண்பர்களுடைய பாராட்டுக்கள் அப்படியே பிசாசாக சில்வாவின் நினைவுக்கு வந்து சித்திரவதை செய்தன. அன்றொருநாள் தன் மனைவி லதா அவளது தோழி நந்தாவுக்குச் சொன்ன வார்த்தைகள்...

"நந்தா, எனது மனச்சாந்திக்காகத்தான் இதை எழுதினேன் புத்தகமாக வெளியிட எனக்குஎண்ணமில்லை"- அப்படியே நினைவுக்கு வந்து சில்வாவின் நெஞ்சை நெருடின.

இரு கைகளாலும் மண்டையில் அடித்தபடி படுக்கையில்போய் 'தொப்' பென்று குப்புற விழுந்தார். அவர் அழுகிறார் என்பதை அவருடைய உடல்குலுங்கிக் குலுங்கி அறிவித்தது.

சற்றுநேரங்கழித்துப் படுக்கையை விட்டு எழுகிறார். எழுந்தவர் பார்வையில் அறையின் வாசல் நிலைக்கு மேல் மாட்டப்பட்டிருந்த அவருடைய தம்பி நிமாலுடைய படந்தான் பட்டது. வெறி பிடித்தவர் போலத் தனது அலுமாரியைநோக்கி ஓடினார். அலுமாரியைத் திறந்து, அதன் கீழ்த்தட்டில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பழைய உடுப்புகளை எடுத்து எறிந்து விட்டு உள்ளே கையைவிட்டு ஏதோ துழாவுகிறார். கையில் ஒரு சிறிய கைத்துப்பாக்கி அகப்படுகிறது. துப்பாக்கியை எடுத்துக்கொண்டு நேராகப் படுக்கையறையை நோக்கி நடக்கிறார். அவரைப் பார்க்கவே பயமாயிருந்தது. அழுததாலும், கோபத்தினாலும் முகம் சிவந்துபோயிருந்தது. தலைமயிரெல்லாம் அங்குமிங்குமாய்க் கலைந்துபோய் அலங்கோல நிலையிலிருந்தது.

படுக்கையறையினுள் சென்ற சில்வா குப்புறப் படுத்திருந்த லதாவின் முதுகுச் சட்டையைப் பிடித்து ஆத்திரத்துடன் தூக்கியதும் திடுக்குற்றுப் போனார். லதாவின் உடல் சில்லிட்டுப் போயிருந்தது. அப்படியே லதாவின் உடலைப் புரட்டினார். அவளுடைய வாயிலிருந்து நுரை தள்ளியிருந்தது. மூக்குத் துவாரங்களில் கையை வைத்துப் பார்த்தார். மூச்சு நின்றுபோயிருந்தது. தலையணைக்கும் பக்கத்தில் தோழி நந்தாவுக்கு விலாசமிடப்பட்ட ஒரு கடிதம் இருந்தது. அவசரமவசரமாக அதை எடுத்துப் பிரித்துப் படித்தார்.

'நந்தா!,

ஒவ்வொருமுறையும் யாராவது நாவலைப்பற்றிச் சொல்லும்போதும், மறந்துவிடவேண்டுமென்று முயற்சித்துக்கொண்டிருக்கும் அந்த முகம் தளிராக வந்து ஆடுகிறது. எழுதிவிட்டால் மனத்துயர் நீங்குமென நினைத்தேன். ஆனால் துயர் நீங்கவுமில்லை - மனம் தாங்கவுமில்லை-சாகிறேன்.

— லதா,

(யாவும் கற்பனை)

— பெரி. சண்முகநாதன் —

---

**26-11-66**

வாரமலரில்

'செந்தாரகை'

எழுதும்

**'அவள் பெண்ணா?'**

என்னும் சிறுகதை

வெளியாகிறது.

---

# அண்ணலும் நோக்கினன் அவளும் நோக்கினள்

— இ. நாகராஜன் —

பொய்யிசையாப் புகழ் பூத்த முனிவர் தேவர்
புண்ணியத்தால் பொலிகின்றோர் பாதம் போற்றி
துய்யமன ஒழுக்கமுறு மனிதன் வானத்
தூமதியும் தோற்கின்ற தூய நெஞ்சோன்
மையநடை பயின்றுமா முனிவன் பின்னே
பண்புறவாய் பணிந்துவரும் பான்மை கண்டு
செய்யமலர்த் திருக்கேழ்வன் இவன்தா னென்று
தெரிந்தனபோல் புட்களெலாம் பாடிற் றுமே!

விண்ணோக்கி வளர்ந்துள்ள மாடி மீது
விண்மதியே முகமாக வீணை மீட்டும்
பண்ணிசையும் பழரசமும் பாகும் ஒன்றிப்
பரிமளிக்கும் மொழியாக யாரும் விண்ணும்
எண்ணரிய எழிலுடனே பெண்மைக் கேற்ற
இயல்புக்குச் சான்றாகி இலங்கு வாளை
அண்ணலவன் நோக்கின்றான் அவளும் பார்த்தாள்
அக்கண்கள் ஊடகங்கள் ஒன்றிற் றுமே!

இதயங்கள் இரண்டொன்றாய் இணையு மாகில்
இரண்டான வெளியுறுப்பாம் வாய்கள் பேசக்
கதையுளதோ? கருத்தொன்றிக் காதல் முற்றிக்
க வுற்றுக் காலத்தால் பிரிக்கா வாறு
விதிவித்த வித்தையினுள் வீறி நின்ற
வீரனுளம் அவள் புகுந்தாள் விலங்காய் நின்ற
முதியவில்லு முறிகணவன் வலிமையால் நாளை
முற்றுறவே முறியுமென்ற உண்மை கண்டாள்.

கண்டுண்டு துய்த்தறியும் மனித நெஞ்சக்
காதலென்றும் நிலைப்பதுண்டோ? காலம் ஓட
வண்டொத்த விழிகுழியும் வனப்பார் மேனி
வளங்குன்றி நரைதிரையால் வலியும் மேலாம்
கண்டொத்த சொற்பிறழும் கம்பன் கண்ட
காவியத்தின் உட்பொருளாம் இராமன் என்ற
திண்டோளன் சீதையின்மேல் கொண்ட காதல்
செமீது சிரஞ்சீவி யாகி நிற்கும்.

[இலங்கைக் கம்பன் கழகம் நடத்திய கம்பன் விழாக் கவியரங்கில் பாடிய கவிதையின் ஒருபகுதி]

---

# 'ஒன்றே குலனும் ஒருவனே தேவனும்'

'ஒன்றேகுலனும் ஒருவனே தேவனும்' என்ற திருமந்திரத்துக்கு சாதியில்லை என்று பொருள் கொண்டால் அதே திருமந்திரத்தின் கண் நாற்பால் குலங்களையும் எடுத்தியம்பிய பகுதிகளின் கதி யாதாய்முடியும்? ஒரு நூலுக்குப் பொருள் காணுங்கால் முன்பின் விரோதமுறுவண்ணம் பொருள் காணுவதன்றோ பொருத்தம். அத்திருமந்திரத்துக்கு மெய்ப்பொருள் யாதெனில்:-

'ஒருவனே தேவனும்' என்பது சர்வசங்காரகாரணரும் அழிவில்லாதவருமாகிய பரம்பொருள் சிவபெருமான் ஒருவரே என்பதையும் 'ஒன்றே குலனும்' என்பது அப்பரம்பொருளாகிய சிவபெருமானுக்குச் சீவர்களெல்லாம் மீளா அடிமைக் குடி என்பதையும் குறிக்கும். இவ்வாறு பொருள் கொள்ளுவதே சற்சம்பிரதாயத்தில் வந்த மெய்ப்பொருளாம். ஆகவே 'ஒன்றே குலனும்' என்ற திருமந்திரப் பகுதிக்குக் குலபேதமில்லை என்று பொருள் கொள்வது பொருத்தமற்றது.

— சிவஸ்ரீ
ச. குமாரசுவாமிக்குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹாலிவூட் 'ஸ்ரார்'கள்

— 'கணேஷ்' —

'ஹாலிவூட்'- எந்த ஒரு சினிமா ரசிகனும் தெரிந்து வைத்திருக்கும் பெயர். இதில் வரும் பிரபலநட்சத்திரங்களின் பெயர்களும் அநேகமாக எல்லோருக்கும் தெரியும் ஆனால் அவர்களது தனி வாழ்க்கை பற்றிய விபரம் அநேகருக்குத் தெரியாது என்று கூறலாம். இவர்களைப் பற்றி அறிந்து கொள்ள ஆவல் கொண்டிருக்கும் ரசிகர்களின் ஆவலை உணர்ந்து இது வரை தெரிந்து கொள்ளாத பல ருசிகர தகவல்களை இங்கு அருமையான முறையில் சேகரித்துத் தருகிறார் 'கணேஷ்.'

**சார்ல்ஸ் ஹெஸ்டன்:** அதிக மத சம்பந்தமான படங்களில் நடித்து பிரபல்யம் வாய்ந்த இவரது வயது 41. 6 அடி 2 அங்குல உயரமுள்ள இவர் வசனங்களை மிகவும் விரைவாக மனனம் செய்வதில் கெட்டிக்காரர். நடிப்பில் மட்டுமல்ல வாழ்க்கையிலும் சிறந்த கொள்கைகளையே கடைப்பிடித்து வாழ்கிறார். அமெரிக்காவில் நிறவெறிக் கெதிராகப் போராடி வருபவர் இவர். ஹாலிவூட்டையே இது சம்பந்தமாக பகிரங்கமாகத் தாக்கும் துணிச்சலுடையவர். ஐந்து வயது முதலே நடிக்கத் தொடங்கிய இவர் ஒருபடத்துக்கு வாங்கும் தொகை 5 லட்சம் டாலர்.

**எலிசபெத் டெய்லர்:** ரிச்சர்ட் பேர்ட்டனைத் திருமணம் செய்ததிலிருந்து மேலும் பிரபல்யமடைந்த நடிகை இவர். தாமே சமைத்துத் தமது கணவர் பேர்ட்டனுக்குப் பரிமாறுதலில் விருப்பம் கொள்பவர் இவர். திடீரெனக் கோபம் வரும், பின்னர் வந்த இடம் தெரியாமல் மறைந்து விடும் இவருக்கு! காலம் போகுமுன் அனுபவிக்கக் கூடிய எல்லாவற்றையும் அனுபவித்து விடவேண்டுமென்பது இவரது கொள்கை. எந்தப் பாகத்தையும் துணிந்து ஏற்றுக் கொள்பவர் இவர்.

**டோனி பேர்க்கின்ஸ்:** நன்ருக, டிப்டாப்பாக உடை உடுத்திக் கொள்வதில் பிரியமானவர். 6 அடி 2 அங்குல உயரமான இளைஞர் இவர். 'ஒரு மனிதன் வாழ்வதற்கு ஒரு அறை போதும்' எனத் தெரிவிக்கும் சிக்கன நடிகரான இவர் தமது பெரிய வீட்டை வாடகைக்குவிட்டுள்ளார். பணம் சேகரிப்பதில் அதிக அக்கறை கொள்ளாத பேர்க்கின்ஸ் சுதந்திரத்தைப் பெரிதும் விரும்புகிறார்.

**பிரிஜெட் பார்டோ:** ஹாலிவூட்டின் 'கவர்ச்சிக் கன்னி' என அழைக்கப்படும் இவர் சில நல்ல காரியங்களிலும் ஈடுபாடு காட்டியுள்ளார். மிருகங்களை மிருகத்தனமாக வதை செய்வதை இவர் கடுமையாகவெறுக்கிறார். 'சூரியன், கடல் உல்லாசம்' எனக்கு மிகவும் பிடித்தவை என்கிறார் இவர். திருமணங்களில் அதிக நம்பிக்கை வைக்காத இவர் 'காதல் என்பது அதிக நாட்களுக்கு நீடிப்பதில்லை' எனக்கருத்து தெரிவித்துள்ளார். சமீபத்தில்தான் ஜேர்மன் தொழில்அதிபர் ஒருவரை திருமணம் புரிந்தார்.

**பிராங்க்சினட்ரா:** பிரபலநடிகர் மட்டுமல்ல பாடகருங்கூட. இவர் மகளும் ஒரு பிரபல பாடகி. 50 வயதுடைய சினட்ரா 21 வயதுடைய மியா பரோ என்பவரைசென்ற ஜூலை மாதம் 3-வது மனைவியாகத் திருமணம் செய்துகொண்டார். சண்டித்தனத்திலும் இவர் சளைத்தவரல்ல. இவர் ஒரு நல்ல நகைச்சுவை நடிகர் என்பது பலரது அபிப்பிராயம். இவருக்கென ஒரு தனி ரசிகர் கூட்டம் இருக்கிறது.

**ஜினலோலா பிரிஜிடா:** இத்தாலியைப் பிறப்பிடமாகக்கொண்ட இவரை 'லோலா' என்று செல்லமாக அழைப்பார்கள். தாம் கவர்ச்சிகரமாக நடிப்பதைத்தமது தந்தையிரும் புவதில்லையெனத் தெரிவிக்கும் இவர் சமீபத்தில்தான் தமது கணவரிடமிருந்து விவாகரத்துப்பெற்றுக்கொண்டார். 'தைரியமான ஆண்களையே தாம் அதிகம் விரும்புவதாக' ஒருவருடத்துக்கு முன் இவர் வெளிப்படையாகக் கருத்துத் தெரிவித்திருந்தார். திருமணம் பற்றிய கேள்வி எனக்குப் பிடிப்பதில்லை' என ஒருமுறை தெரிவித்திருந்தார். தமது உடலமைப்பை மிகவும் அவதானமாகப் பாதுகாத்துக் கொள்பவர்.

**காரி கிரூண்ட்:** வயதாகிவிட்டாலும் புதுமையை விரும்புபவர். வாட்டசாட்டமான உடலமைப்புக்கொண்ட இவர் இப்போதும் சுறுசுறுப்போடு நடிக்கிறார் 'ரியலிஸம்'- இதைத்தான் இப்போது ரசிகர்கள் விரும்புகின்றார்கள் என்கிறார் இவர்.

**சோபியா லோறன்:** 'நான் மிகவும் கூச்சமுடையவள். படத்தில் எப்படி நடித்தாலும் வெளியில் இப்படித்தான். கமராவுக்கு முன்னால் எனக்குப் புதுத்துணிவு பிறக்கிறது' என்கிறார் சோபியா லோறன். கோடிக்கணக்கில் பணம் சேர்த்து வைத்திருக்கும் இவர் தமது பழையகால ஏழ்மைநிறைந்த வாழ்க்கையை சில வேளைகளில் எண்ணிப் பார்ப்பாராம். கணவரான பிரபல தயாரிப்பாளரான கார்லோ பொண்டியை எவ்வளவோ பரபரப்புக்கிடையில் திருமணம் செய்து கொண்டிருக்கும் இவர் ஓய்வில்லாமல் நடித்துக் கொண்டிருக்கிறார்.

**மார்லண் பிராண்டோ:** சார்ல்ஸ் ஹெஸ்டன் போன்று இவரும் கொள்கைவீரர். நிறவேற்றுமையை முன்னின்று எதிர்ப்பவர் இவர். தலைசிறந்த நடிகரான இவர் தாம் மேலும் திறமையாக நடிக்கவேண்டுமென விரும்புவதாகத் தெரிவித்துள்ளார். சமீபத்தில் சார்லிசாப்ளின் தயாரித்த ஒரு படத்தில் நடித்து மேலும் புகழ் பெற்றுள்ள இவர், மேலும் சில புதிய படங்களில் ஒப்பந்தமாகியுள்ளதாகத் தெரிகிறது. உல்லாசமாக வாழ்வதில் நாட்டமுடையவர் இவர்.

**நேற்றல்வூட்.** குளிர்மையான முகம்கொண்ட இவர் 40 படங்களுக்கு மேல் நடித்திருக்கிறார். 4 வயதிலேயே நடிக்கத் தொடங்கிய இவரது தற்போதைய வயது 28. 5 அடி ஒரு அங்குல உயரமான இவரது நிறை 99 ருத்தல். (சிறிய உருவம் தான்) ஹாலிவூட் எனது வீடு என்கிறார் இவர் பெருமையுடன். எதிலும் அதிக 'சீரியஸ்னெஸ்' இல்லாத இவர் ஒரு ரஷ்யப்பெண் என்பது பலருக்குத் தெரியாது. ஏற்கனவே திருமணமாகி விவாகரத்துச்செய்து கொண்டுள்ள இவர் 'எனக்கொரு நல்ல கணவன்கிடைத்து விட்டால் நல்ல குழந்தைகளைப்பெற்றுக்கொண்டு திரையுலகிலிருந்து விலகி விடுவேன்' என்கிறார்.

**போல் நியூமன்:** ஹிச்கொக்கின் 'டோர்ண்கேர்ட்டின்' (கிழிந்ததிரை) என்ற படத்தில் நடித்து மேலும் புகழ்பெற்றஇவர் குடும்பத்தைப் பெரிதாகப் பேணுகிறார். 10வருடகாலமாகத் திரையுலகிலிருந்து வரும் இவர் மூன்று முறை 'அக்காடமி' பரிசுகளைப் பெற்றுள்ளார். இவரது மனைவியும் இவரைப்போல் நடிப்புத்திறன் படைத்தவர். இப்பொழுதும் இவரது மனைவிசின்னொனறியுடன் ஒரு படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

நாடக விமர்சனம்

## அன்பின் பேரால்.....

உரும்பராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் கடந்த 6-ம் திகதி ''அன்பின் பேரால்'' என்ற நாடகம் மேடையேற்றப்பட்டது.


நடுத்தரக் குடும்பத்தைச்சேர்ந்த ஒரு இளைஞன் ஓர் ஏழைப் பெண்ணைக் காதலிக்கிறான். எப்படியாவது தனது இரண்டாவது மகளுக்கு விவாகஞ் செய்துவிடவேண்டுமென்னும் எண்ணத்தில் அக்குடும்ப நண்பரான தரகர் ஒருவர், அப்பெண் நடத்தை கெட்டவள் என்று ஒரு அநாமதேயக் கடிதமெழுதிவிடுகிறார். இறுதியில் தரகரின் குட்டு வெளிப்படுகிறது. இளைஞன் தன் காதலியிடம் ஓடோடிச் சென்று மன்னிப்புக்கோருகிறான். ஆனால் அப்பெண்ணோ தரகரின் மகளையே தன் காதலன் மணம் புரியவேண்டுமென்று வற்புறுத்தி மணவினையை முடித்துவைக்கிறாள். தான் காதலனின் தம்பியை மணந்து கொள்கிறாள்.

நடிப்பைப் பொறுத்தவரையில் எல்லோரும் நன்ருக நடித்தார்கள். கதாநாயகன்சுந்தரமூர்த்தியாக நடித்த லோகநாதனின் நடிப்பு உணர்ச்சியூட்டக்கூடிய வகையில் அமைந்தது. இலட்சுமியாகப் பெண் வேடம் தாங்கிய துரை மனோகரனின் வேஷப் பொருத்தமும் நடிப்பும் குறிப்பிடத்தக்கன. ஜெயகுமாராக நடித்த ஆனந்தராசா தமது பாத்திரத்தை உணர்ந்து நடித்தார். சுப்புரத்தினமாக நடித்த ஆசிரியர் திரு. இ. யோகேஸ்வரனின் குணசித்திர நடிப்பு அபாரம். தரகர் நல்லதம்பியாக நடித்த இந்திரதாஸ் தமது சிறந்த நகைச்சுவைமூலம் எல்லோரையும் குலுங்கக் குலுங்க சிரிக்கவைத்தார்.

நாடகத்தின் கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்பை துரை மனோகரன் மேற்கொண்டிருந்தார்.

மொத்தத்தில் ''அன்பின் பேரால்'' ஒரு வெற்றியென்றே கொள்ள வேண்டும்.

—வ. மகாலிங்கம்



காதல் மன்னனுக்கு சிறுவன்காட்டுவது நிச்சயம் காதல் பாதையல்ல. 'ராமு' படத்தில் உள்ள முருக்கும் ஒரு காட்சி.




## —மேகலா பார்வையில்—

தமிழ் பிறந்து, தவழ்ந்து, வளர்ந்து தமிழி[...] சுவையை உலகறியச் செய்து கொண்டிருக்கு[...] தமிழ்நாட்டிலே தமிழ் கதைகளுக்குப் பஞ்சம[...] வெட்கக்கேடு!

அரைவாசிப்படம் முழுவதும், அணிந்திருக்[...] உடை பிசகாமல், தலைப்பாகை கீழே விழாமல் [...] கலைத்து இளைக்காமல், பத்துமல்லர்களுக்கு கத[...] நாயகன் தனித்துநின்று 'அடியும் இடியும்' கொ[...]த்து விழுத்தும் வேடிக்கையான சண்டைக் காட்[...] கால்வாசி எப்படியோ அர்த்தமில்லாமல் புகுந்[...] கொள்ளும் 'காதல்' காட்சி, கால்வாசி நகை[...] சுவை என்ற பெயரில் 'தமாஷ்' காட்சி-இப்படி[...] தான் இப்போது தமிழ்நாட்டிலிருந்து வெளியாகி[...] கொண்டிருக்கும் சினிமாக்கள் இருக்கின்றன. நா[...] மேற்சொன்ன இலக்கணங்களிலிருந்து ஓர் அ[...] விலாவது குறையாமல், அதே ரகத்தைச் சேர்ந்[...] 'கன்னித்தாய்' (?) என்ற ஒரு படம் ஈழத்திரை[...]யில் ஓடிக்கொண்டிருக்கிறது.

கொள்கையும் லட்சியமும் பேசும் 'திலக'[...]கள், கதையைப்பற்றி ஏன் சிறிதளவாவது சிந்தி[...]க்கக் கூடாது? தனது பேத்தி வயதில் இருக்கும் ந[...] கையுடன் உருண்டு, விழுந்து, புரண்டு 'குலிக்ஸ்' ஆடி, பூங்காவனத்தில் காதல் காட்சிகளில் மட்டு[...] நடித்துவிட்டால், மக்கள் ஆதர[...] பெற்றுக்கொண்டிருக்கலாம் என்ற ஒருவித த[...] பெண்ணம்தான் கண்ணை மூடி மறைத்து விடு[...]றதோ?

'மக்கள் நலனே தமது நலன்' என்று கூ[...] 'மக்கள் திலக'ங்களாகி விட்டவர்கள், மக்க[...] வாழ்க்கையில் பயன்படக்கூடிய - படிப்பினையை[...] தரக்கூடிய ஒரு நல்ல கதையுள்ள படத்தில்மட்டு[...] தான் நடிப்பேனென்று நிபந்தனை போட்ட[...]லென்ன?

ரசிகர்களின் ரசிகத்தன்மை, சண்டையையும் கதாநாயகனும் கதாநாயகியும் சும்மா 'லாலா'வென்று பாடி கொஞ்சிக்குலாவி விழுந்து புரள்வ[...]தையும் பார்ப்பதில்தான் இருக்கிறதென்று தமி[...] நாட்டு ஒருசில தயாரிப்பாளர்களும், 'திலக'ங்க[...]ளும் எண்ணிக் கொண்டிருப்பதால்தான் இப்படி[...]யான மட்டரகமான படங்களைத் திணித்துப் பிழைப்பு நடாத்திக்கொண்டிருக்கின்றனர். ஈழத்[...] ரசிகர்களைப் பொறுத்தவரையில் இந்தநினைப்பு இப்போது பொருந்தாது. அவர்கள் நன்ருகப் படித்து விட்டார்கள். தரமான கதை, தரமான நடிப்பு, தரமான காட்சி—ஆமாம், எல்லாம் தரமானவை[...]யாக இருந்தால்தான் வரவேற்பார்கள்! 'முட்[...]டாள்'தனமான படங்களைக் [...]டி [...]களை ஏமாற்ற நினைப்பது இனி முடியாத காரியம்!

## நடிகை சாவித்திரி மகனுக்கு திருமணம்!

சிவாஜி வாழ்த்தினர்!!

சாவித்திரி மகனுக்கு திருமணம் நடந்தது. சிவாஜி கணேசன் வாழ்த்தினார்.

தேவேந்திரன் உட்பட எல்லா தேவர்களையும்கதிகலங்க அடித்து நொறுக்கி வந்தான் அசுரன் சூரபத்மன். சூரபத்மனின் த[...]யைச் சீவி எறிய முருகன் வந்தான். வேல் எடுத்து போர்புரிந்து சூரனைவீழ்த்தினான்.

தேவேந்திரன் மனம் மகிழ்ந்தான். மகள் தெய்வானையை முருகனுக்கு மணம் முடிக்க முடிவுகட்டினான். முருகன் மணக்கோலம் பூண்டுமண மேடைக்கு வந்தான்.

### சிவாஜி வாழ்த்து

புரோகிதர்கள் வேதம் ஓத, வீரபாகு வாழ்த்த, தேவர்கள்பூமாரிபொழிய பார்வதியாக சாவித்திரியும், சிவனாக ஜெமினி கணேசனும், முருகனாக சிவகுமாரும் நடிக்கும் இந்தக்காட்சி ஏ.எல்.எஸ் புரடக்ஷன்ஸின் 'கந்தன் கருணை' என்ற கலர்ப் படத்துக்காக சாரதா படப்பிடிப்பு நிலையத்தில் படமாக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அக்காளின் அன்பான அணைப்பில் தம்பியின் துயரமெல்லாம் தீராதா என்ன? 'ராமு' படத்தில் கே. ஆர். விஜயா தோன்றும் ஒரு கட்டம்.

ஹிந்திப்பட உலகம்

# வீனஸின் 'சூரஜ்'

## வெள்ளி விழா கொண்டாடியது!

சென்னை வீனஸ் பிக்சர்ஸாரின் அரிய தயாரிப்பு ''சூரஜ்'' ஹிந்திப் படம் வடக்கே 25 வாரங்கள் ஓடி வெள்ளி விழாக் கொண்டாடியது.

இதுகுறித்து, பம்பாய் தாஜ் ஹோட்டலில் நடந்த விழாவில் மகாராஷ்டிர கவர்னர் டாக்டர் பி. வி. செரியன் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டார்,

படத்தில் பங்கு கொண்ட கலைஞர்களான வைஜயந்திமாலா, ராஜேந்திரகுமார், டைரக்டர் டி. பிரகாஷ் ராவ், இசையமைப்பாளர்கள் சங்கர்-ஜெய்கிஷன் பின்னணிப் பாடகர்கள் மகமத்ரபி, சாரதா, கேமரா வி. கே. மூர்த்தி, கலை எம். ஆர். அச்ரேகர் முதலானவர்களுக்கு வீனஸ் பிக்சர்ஸின் சார்பில் திருமதி செரியன் வெள்ளிக் கேடயங்கள் வழங்கினார்.

படஅதிபர் எஸ். கிருஷ்ணமூர்த்தி பேசுகையில்- வீனஸ் நிறுவன ஊழியர்களுக்கு 5 மாத சம்பளத் தொகை போனசாக அளிக்கப்படும் என்றார்.

வெள்ளி விழா நாளன்று மகாராஷ்டிரத்தில் 'சூரஜ்'ஜுக்கு வசூலான தொகைபடைவீரர்களின் குடும்ப நலனுக்காகக் கொடுக்கப்பட்டது.

இவ்விழாவுக்கு ராஜ்கபூர், பத்மினி, ரமானந்த் சாஹர், மோகன் குமார், அமர்ஜீத், கே. சி. தல்லவர் முதலான எண்ணற்ற படஉலக பிரமுகர்களும் கலைஞர்களும் வருகை தந்திருந்தனர்.

### "கல்யாண ஊர்வலம்"

திருமகள் கம்பைன்ஸாரின் ''அனுபவம் புதுமை'' படத்திற்காக சாரதாவில் ஒரு பாட்டு ஒலிப்பதிவானது.

''கனவில் நடந்ததோ
கல்யாண ஊர்வலம்
கனிந்து வந்ததோ
மேனியில்
கள்ளூறும் காவியம்''

என்று தொடங்கும் அப்பாடலை கண்ணதாசன் எழுதியிருந்தார். விஸ்வநாதன் இசை அமைத்திருக்க டி. எம். சௌந்தரராஜன், பி. சுசிலா பாடினர்.

கே. ஆர். விஜயா, முத்துராமன், மனோகர், சுந்தரராஜன், ரத்னா, டி. ஆர். ராமச்சந்திரன், மனோரமா, டி. எஸ். பாலையா ஆகியோர் நடிக்க, சி. வி. இராஜேந்திரன் டைரக்ட் செய்கிறார்.

# ஈழத்தில் கர்நாடக இசை வளர

## இசைப்புலவர் கூறும் யோசனைகள்

ஈழத்தில் கர்நாடக இசைவளர இசைப் புலவர் திரு. சண்முகரத்தினம் சில நல்ல கருத்துக்களை இக்கட்டுரையில் கூறுகிறார்:-

இசையானது இறைவனிடத்திலிருந்து வெளிப்பட்டு மகரிஷிகள் மூலம் பூலோகத்திற்கும் பூலோகத்தில் வாழும் மக்களுக்கும் கிடைத்திருக்கின்றது. இசைவடிவாகிய இறைவனும் உலகமும் எப்பொழுது தோன்றியது என்று சரித்திர ஆராய்ச்சியாளர்களால் எப்படிக் கணக்கிட முடியாதிருக்கின்றதோ அவ்வாறே இசையினுடைய தோற்றமும் கணக்கிட முடியாதபடியிருக்கிறது. இசைதெய்வீகமானது என்றும் சாமவேதம் என்றும் இறைவன் நாதவடிவாயிருப்பதால் நாதப்பிரம்மம் என்றும் சொல்லப்படுவதால் இசையே நாதப்பிரம்மம் என்று நாதோபாசனை செய்வதால் நாதப்பிரம்மமாகிய இறைவனையுபாசித்துப்பயன் அடைவதற்கு இசையே சுலபமான வழியென்றும் கூறப்படுகிறது.

64 கலைகளுள் நுண்கலைகளாகிய சங்கீதம், சிற்பம் ஓவியம் முதலியவற்றுள் இசையே சிறந்த இடத்தைப்பெற்றிருப்பதுடன் முத்தமிழில் இசைத் தமிழே நடுநாயகமாகவும் விளங்குகிறது. இசையானது பாடுபவரின் மனத்தையும் கேட்பவரின் மனத்தையும் உருக்கவல்லது. சகல சீவராசிகளையும் மெய்மறந்து இசைந்து நிற்கச்செய்வது. கல்லையும் உருக்கவல்லது. சிறும் நாகத்தையும் அநுபவித்து அடங்கச் செய்வது.

பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பே இசையானது உச்ச நிலையிலே இருந்ததென்றும் பாண்டிய மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் முதற் சங்க காலத்தில் சங்கப்புலவர்களால் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் ஆராயப்பெற்றன வென்றும் இசை நூல்கள் பல வெளிவந்தன என்றும் சிலப்பதிகார உரையாசிரியர் முதலானோர் கூறுகின்றனர். தென்மதுரையைக் கடல் கொண்டபொழுது இந்நூல்களெல்லாம் அழிந்தன என்று கூறப்படுகிறது. அதன் பின் சிலகாலம் இசையின்வளர்ச்சி சற்று குறைந்திருந்தபோதிலும் ஏறக்குறைய மூவாயிரம் வருடங்களின் முன்பே மிகவும் உன்னத நிலைக்கு வளர்ந்து சிறப்படைந்திருந்ததென்றும் அறியக்கிடக்கிறது.

பின்னர் சமய குரவர் அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் போன்ற மகான்கள் (முறையே கி. பி. 7, கி. பி. 8, கி. பி. 7, கி. பி. 9) இசைத்திறனால் இறைவனுடைய அருள் பெற்றுப் பல அற்புதங்களைச் செய்தார்கள்.

இவர்களுடைய திருமுறைகள், இசைகளின் பழம் பெரும் செல்வமாகவும் அருள் நெறியின் வழிகாட்டியாகவும் இறைவனைப் போன்று பேணிப்போற்றி வளர்க்கப்பட்டு வருகின்றன. 1484-1564 புரந்தரதாஸர் உன்னத நிலையில் இருந்து சங்கீதத்தை அப்பியாசிப்பதற்குத திட்டம் அமைத்துசுராவளி, அலங்காரங்கள், கீதங்கள், பிரபந்தங்கள் முதலியவற்றை இயற்றி பரப்பிச் சேவை செய்துள்ளார்.

ஏறக்குறைய 500ஆண்டுகளின்முன் வாழ்ந்த அருணகிரிநாதர் முருகனின் அனுபூதி பெற்றவர் கந்தரலங்காரம், கந்தரனுபூதிமுதலிய நூல்களை இயற்றியவர். அவர் பற்றிய திருப்புகழில் ஆகிய இசை நுட்பங்கள்



பொதிந்திருக்கின்றன. பல்வேறு தாள அம்சங்களை அவற்றிற்காணலாம். இவர் ஒரு சிறந்த வித்வானவர். இப்படியான சாஸ்திர ஞானமும் தெய்வ அனுபூதியும் இசைத் திறனும் பெற்ற மகான்களே தொன்றுதொட்டு இசையைஉன்னதநிலைக்கு வளர்த்துக்கொண்டுவந்திருக்கிறார்கள். இத்தகைய பெருமை வாய்ந்த தென்னிந்திய சங்கீதமே கர்நாடக சங்கீதம் என்றும் கூறப்படுகிறது.

கர்நாடக சங்கீதத்தின் தனி முக்கியத்துவம் வாய்ந்த அம்சம் இராகமாகும். இந்த இராகமும் பாணியும் பிரஸ்தாரம் பண்ணிப்பாடும் அழகும் கர்நாடக சங்கீதத்தின் உயிர்நிலை என்று சொல்லலாம். இந்த இராகம் பாடும் முறை இந்திய சங்கீதத்திலேயேசிறப்பம்சம் பெற்றுள்ளது. ஒவ்வொரு இராகத்திற்கும் ஒவ்வொரு தனிச்சாயல் உண்டு நாம் பாடும் பொழுதே இது கல்யாணி, இது காம்போதி என்று சாயலைக்கொண்டு கண்டுபிடிக்கக் கூடியதாயிருக்கின்றது. ஒவ்வொரு இராகத்திற்கும் ஒவ்வொரு தேவதை உண்டென்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இந்தத் தெய்வ அம்சங்கள் பொருந்திய இராகங்களை அந்தந்தஇராகத்திற்குரிய சாயல் மாறாதபடி சுருதி சுத்தமாகவும் முறைப்படி சஞ்சாரம் செய்தும் பக்தி நிலையில் நின்று பாடுவதில் திறமையுள்ளவர்களே நாதோபாசகர்கள் என்று சொல்லப்படுவார்கள்.

சங்கீதத் திரிமூர்த்திகளாகிய தியாகராஜஸ்வாமிகள் (1767-1847), முத்துஸ்வாமி தீஷிதர் (1776-1835) சியாமா சாஸ்திரிகள்(1762-1827) ஆகியோர் கர்நாடக சங்கீதத்திற்குப் புத்துயிர் அளித்து அநேக உருப்படிகளை இயற்றி சங்கீத உலகின் வளர்ச்சிக்கு உதவியுள்ளார்கள். இவர்களும் நாதோபாசனைதான் செய்தவர்கள். இவர்களைப் போல பல வித்வான்கள் கர்நாடக இசையின் வளர்ச்சிக்கு அரும்பெரும் சேவைசெய்துள்ளார்கள். இவர்களின் வழிவழிவந்த பல மகா வித்துவான்கள் இன்றும் நம்முன் வாழ்ந்து கர்நாடகசங்கீதத்தையும் அதன் மதிப்பையும் வளர்த்து வருகிறார்கள். இன்னும் உலகம் உள்ளளவும் இது வளர்ந்துகொண்டேயிருக்கும். இந்த வளர்ச்சிகுன்றாது. அரசியல் சூழ்நிலைகள் காரணமாக இடையிற சிலகஷ்டங்கள் வந்தபொழுதும் மேற்கூறியபடிமகான்களினால் கர்நாடகசங்கீதம் தரம் குறையாமல் ஓங்கி நிற்கிறது

தென்னிந்தியப் பூமன்னர்கள் இசைமன்னர்களை சமாசனத்திலிருத்தி அவர்களுக்கு அவ்வப் போது வேண்டிய பொருளுதவி செய்து ஊக்குவித்தபடியாலும் இசைமன்னர்கள் கவலையின்றிச் சேவை செய்தனர்.

அண்ணாமலை சர்வகலாசாலை, சென்னை சர்வகலாசாலை, சென்னை அரசாங்க மத்திய இசைக் கல்லூரி முதலிய ஸ்தாபனங்களும் மாபெரும் வித்துவான்களும் இந்திய அரசாங்கமும், பொதுமக்களும், ரசிகர்களுமாக இந்நாளில் இசைக்கலையை வளர்த்து வருகின்றனர். தென்னிந்தியாவைப் பின்பற்றி அந்நாட்டின் உதவியுடனும் ஈழத்திலும் கர்நாடக சங்கீதம் குறிக்கப்படுமளவிற்கு வளர்ந்துள்ளது. இலங்கை அரசாங்கமும் தம்மால் இயன்றவரை இத்தகைய கலைகளின் வளர்ச்சிக்கு ஆதரவளித்து வருவதை நாம் ஒருபோதும் மறக்க முடியாது. நமது நாட்டு மக்களும் இயன்றவரையில் ஆதரவளித்து வளர்த்துவருகிறார்கள். இதனால் இங்கே பல வித்துவான்கள் உருவாகி அரும்பணி செய்துகொண்டிருக்கிறார்கள். பல வித்துவான்கள் தோன்றியிருந்தபொழுதிலும் சிலர் தென்னிந்திய வித்துவான்களாலும் ரசிகர்களாலும் மதிக்கப்பெற்றவராயிருக்கின்றனர். ஆகவே நாம் பெருமைப்படக்கூடிய அளவுக்கு ஈழத்திலும் கர்நாடக சங்கீதம் வளர்ந்துள்ளது. ஆனால் இந்த வளர்ச்சியைப் புரிந்துகொள்வதற்கு ரசிகர்களுடைய தராதரம் அவ்வளவாகவளர்ந்திருப்பதாகச் சொல்ல முடியாது.

சென்னை மியூசிக் அக்கடமி போன்ற இசைஸ்தாபனங்கள் நடாத்தும் இசைவிழாக்கள், இசையாராய்ச்சிகள் போன்றவை இலங்கையிலும் நடைபெறவேண்டும். முழுநேர இசைக்கல்லூரி ஒன்றுவது இங்கே பணிபுரியவேண்டும். இசைவித்துவான்களுக்கு அரசாங்கமும் போதிய உதவியும் மதிப்பும் கொடுக்க வேண்டும். தென்னிந்திய மியூசிக் அக்கடமிபோன்ற தாபனங்கள் ஈழத்தில் உள்ள வித்துவான்களுக்கும் தங்கள் விழாவில் சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். இசை கற்பவர்கள் இசைக்கென்றே கற்க வேண்டும். இசையாசிரியர்கள் கவலையின்றி வாழ அரசாங்கமும், பொது மக்களும் ஆவன புரிதல் வேண்டும். ஆகவே இப்படியான வாய்ப்புகள் கிடைக்கும் பட்சத்தில் ஈழநாட்டிலும் கர்நாடக சங்கீதம் தற்போதைய நிலையிலும் எத்தனையோ மடங்கு உயரும் என்பதில் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# -குடும்பவாழ்க்கையும் நவாம்சச்சக்கரமும்-

— மேல் கரவை கா. வ. சிவப்பிரகாசன் —


ஒருவனுக்கு ஒருத்தி என்று ஒரு நியதி. இதற்கு விதிவிலக்குமுண்டு. ஆண் பெண் உறவு இன்றி உலக மக்கள் இருக்க முடியாது. இந்துக்கள்தெய்வம்சிவனும் சக்தியாகிய உமாதேவியாருடன் ஒன்றித்தவர்தான். பாதி சிவன் பாதிசக்திஎன்ற பரமசிவனின் ''அர்த்தநாரீசுரர்'' மூகூர்த்தமும்இதைத்தான் குறிக்கின்றது. ஒரு கன்னியும் ஆடவனும் விவாகஞ் செய்து கணவன் மனைவி ஆகிவிடுகின்றனர். ஒருவரின் வாழ்க்கை நிலையைப் பரிபூரணமாக, அவர் பிறக்கும் பொழுது வானமண்டலத்தில் நின்ற கிரகங்களின் நிலையிலிருந்து எளிதில் அறிந்துகொள்ளலாம். அந்த நிலையைக் காட்டுவது, ஒருவரின் ஜெனனஜாதக இராசிச்சக்கரம். இதுதான் ஜாதக மூலசாதனம்.

களத்திர விஷயங்களை ஆராய்வதற்கெனப் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்படுவது நவாம்சச்சக்கரம். இது, ஜெனனஜாதக இராசிச்சக்கரத்திலிருந்துதான் தயாரிக்கப்படுவது. இராசிச்சக்கரத்தில் நிலைகொண்டுள்ள கிரகங்களின் ஒன்பதாவது அம்சநிலை கொண்டுதயார் செய்வதே சரியான முறை. அதற்கு இராசிச்சக்கரம் கிரகங்களின் பாகை, கலை முதலிய விபரங்களோடு கணிக்கப்படல்வேண்டும். இதற்கு ''இந்திய நிரயன'' முறை வகை செய்கின்றது

சாதாரணமாக வேறு ஒரு முறை தற்பொழுது கையாளப்படுகின்றது. இராசிச்சக்கரத்தில் உள்ள இலக்கினத்தின் ஒன்பதாவது அம்சத்தைக்கணித்து எடுத்து அதை நவாம்சஇலக்கினமாய் எடுத்துக் கொண்டு, பஞ்சாங்கத்திலுள்ள கிரகபாதசாரத்திலிருந்து மற்றைய கிரகங்களின் நிலையை அமைத்துக் கொள்வது. இது பலன் கூறுவதற்கு அவ்வளவு ஒற்றுமை காட்டுவதாயில்லை அத்தோடன்றி இம்முறைக் கணிதம் நவாம்சத்தோடு நின்றுவிடும். ஆயுளை நிர்ணயிப்பதற்காய அஷ்டாம்சம், தொழிலை நிர்ணயிப்பதற்காய தசாம்சம் இன்னோரன்ன பல சக்கரங்கள் கணிப்பதற்கும் வகை செய்யமாட்டாது.

உலகத்தலைவர்கள், பெரியார்கள் ஆகியோரது ஜெனனஜாதக இராசிச்சக்கரம், நவாம்சச்சக்கரம்முதலியனவற்றை, நீங்கள் புத்தகங்கள் மூலமாகவோ, பத்திரிகை வாயிலாகவோ காண்கிறீர்கள். அவற்றிலுள்ள நவாம்சச்சக்கரம் கணிக்கப்பட்ட முறையைச் சற்று அவதானியுங்கள்.


கீழே தரப்படும் ஜெனன ஜாதக நவாம்சம், காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் திரு லால்பகதூர் சாஸ்திரி அவர்களினது.




இந்தியச் சோதிடநிபுணர் ஆர். கே. சாஸ்திரி அவர்களும், இதே கிரகநிலையுள்ள நவாம்சத்தைத்தான் கணித்துச் சோதிட நூல்களுக்கு உதவியுள்ளார். இந்தநவாம்சம் கிரகங்களின் ஒன்பதாவது அம்சநிலை கொண்டு தான்தயார்செய்யப்பட்டுள்ளது. உங்களது ஐயம் தீர்வதற்கு. ஆராச்சிப்பலப்படுவதற்கு திரு. லால்பகதூர் சாஸ்திரி அவர்களின் பிறப்பு விபரம் இதோ கொடுக்கின்றேன். — பிறப்பு 9-10-1904 திங்கட்கிழமை காலை 10-25 (LMT) இடம்: வரணாசி, அக்ஷாம்சம் 25° . 20' N. ரேகாம்சம்83° . 2'E. —

இந்த நவாம்சத்தின்துணைகொண்டு, இத் தலைவரின் குடும்ப விஷயங்கள் யாவற்றையும் எளிதில் அறிந்துகொள்ளமுடிகின்றது. உதாரணமாக, திரு. லால்பகதூர் சாஸ்திரி தமது 23-வது வயதில் லலிதாதேவி அம்மையாரை விவாகஞ் செய்தார். அப்பொழுது பெரியாருக்கு ராகுதிசை சூரியன் புத்தி நடந்து கொண்டிருந்தது. மேலேயுள்ள பெரியாரின் நவாம்சச் சக்கரத்தை, அவதானியுங்கள். வீரியஸ்தானாதிபதி, சயனசுகஸ்தானாதிபதி ஆகிய வியாழனின் பார்வை ராகுவிற்குக் கிட்டுகின்றது. வியாழன் நிலைகொண்டுள்ளவீடும்புத்திரஸ்தானமாகிய ஐந்தாம் வீடு இலக்கினமும் வியாழனின் பார்வைக்குள் அமைகின்றது. இராகுவும் கேதுவும் இடதுபக்கப் பிரயாணிகள். ராகுவின்பார்வை நாலு கிரகங்கள் நிலைகொண்டுள்ள களத்திரஸ்தானத்திற்குக் கிட்டுகின்றது. ஏழாதிபதி 7-ல் நிற்கின்றார். சூரியன், இலக்கினாதிபதிசனி, நாலாதிபதி செவ்வாய் ஆகியகோள்கள் 7-ல் நிலை கொண்டுள்ளன. சூரியன் சந்திரலக்கினத்திற்கு இரண்டாதிபதியாகவும் ஆகின்றார். ராகுதிசை சூரியன் புத்தி பெரியாரை மண வாழ்க்கையில் இட்டுச்சென்றது.

குடும்ப வாழ்க்கையிலிறங்கும் ஒரு கன்னியின் ஜாதக நவாம்சச்சக்கரத்தைக் கீழே கொடுக்கின்றேன்.




கிரகங்களின் ஒன்பதாவது அம்சநிலை கொண்டுதயாரிக்கப்பட்ட இந்த நவாம்சச்சக்கரத்தை மாத்திரம் துணைகொண்டு இக் கன்னியின் விவாக விஷயங்களை ஆராயுங்கள். இக்கன்னிக்கு விவாகம் நடந்தேறிய சமயம் ராகு மகாதிசை சனிபுத்தி

பன்னிரண்டாவது வீட்டில் ராகு. திசாநாதனுக்கு 6-ல் சனி என்ற நிலையைமனதிற் கொண்டு சோதிடர் சிலர், கன்னிக்கு இக்காலம் விவாககாலமல்ல என்றுகூறினர். ஆனால் கன்னி தான் விரும்பிய கணவனைக் கைப்பிடித்து, வாழ்க்கைச்சாகரத்தில் இறங்கிவிட்டாள். காலம் ராகு மகாதிசை சனி புத்தி. கன்னிக்கு விவாகம் இக்காலத்து நடந்தேறியதற்குச் சோதிட சாஸ்திர ரீதியில் விளக்கம் உண்டு.

திசாநாதன் ராகு நிலைகொண்டுள்ளஇடம், சயனஸ்தானமாகும். அத்தோடின்றிச் சந்திரலக்கினத்தின்படி களத்திரஸ்தானப் பொறுப்பையும் ராகுதான் ஏற்கின்றார். சந்திரலக்கின அமைவு கொண்[illegible]டு, வீரியஸ்தானாதிபன், நவாம்சவீரியஸ்தானத்தமர்கின்றார். சூரியன் தான் இம்மங்கையின் மாங்கல்யஸ்தானாதிபதியுமாவர்சந்திர லக்கினாதிபதி புதனுடன் கூட்டுச்சேர்கின்றார். ராகுவின் பார்வை இவர்கட்குக் கிட்டுகின்றது. சனி, இலக்கினாதிபதியாகி, களத்திரகாரகன் வீட்டில் அமர்கின்றார். சந்திரலக்கின சயனஸ்தானமும் இதுதான்.

ராகு மகாதிசை சனி புத்தி தொடங்கியதும் கன்னியின் வாழ்வில் ஒரே மறுமலர்ச்சி. கன்னி ஓர் ஆடவன்மேல் காதல் கொண்டாள். காதலும் வளரத்தொடங்கியது. வயதோ மிக இளமை. கன்னியும் பல எதிர்ப்புகளை நோக்கவேண்டியிருந்தது. ஆனால் ஈற்றில் தான் விரும்பிய கணவனைக் கைப்பிடித்தாள்.

நவாம்சம் என்ற பதத்திற்கு மதிப்புக்கொடுத்து நவாம்சச்சக்கரம் கணிக்கப்படல் வேண்டும். உலகத் தலைவர்கள், பெரியார் ஆகியோரின் ஜாதகங்களிற் காணப்படும் நவாம்சச்சக்கரம் கணிக்கப்படும் முறையில்தான் நவாம்சம் கணித்தாகவேண்டும். பிரபல சோதிடர்கள் இதை வலியுறுத்தியுள்ளனர். இப்படியான நவாம்சச்சக்கரம் ஒருவருக்குக்குடும்பவிஷயங்களை ஆராய்வதற்குதவும் அரிய சாதனமாயமைந்து விடுகின்றது.

# வனிதையர் வனப்புற......!

—செல்வி. சற்குணதேவி—

எந்த ஒரு பெண்ணும் தான் அழகுடனிருக்கவே விரும்புவாள். இதை ஒவ்வொரு புருஷர்களும் எதிர்பார்ப்பர். ஆனால் அழகுடன் பொலிய அழகு சாதனங்களையே தேடிச்சென்றால்-? அப்பப்பா ஒரு புறம் செலவணி; மறுபுறமோ ''அலங்காரப் பிடாரி''கள், ''மகட்டுக்காரி''கள் என்ற வசைப் பெயர்கள்! அதற்காக நாம் அழகு செய்யாமல் இருந்துவிட்டாலோ அதற்கொரு புதுப்பெயர்.

எனவே இயற்கையை ஒட்டி மிக எளியமுறையில் சாதாரண பொருட்களைக் கொண்டு அழகுபடுத்திக் கொள்வதேசிறந்தது. பணக்காரியானாலும்சரி ஏழையானாலுஞ்சரி அவளைப்பாதாதிகேசம் பரீட்சிக்கத்தொடங்கிவிடுவர். இந்தவகைப் பரீட்சையில் முதல் இடம் பெறுவது நம் முகப்பரப்பே. ஆகவே நாம்முதலில் முகத்தையும், அதிலுள்ளபிறவுறுப்புக்களையுமே அழகு படுத்தல் வேண்டும்.




வில்லொத்த புருவம்பெற

காலையிலும் படுக்கைக்குச் செல்லுமுன்னரும் பச்சைப் பசும்பாலைப்புருவத்தில் தடவி நன்றாகக் காய்ந்தபின் குளிர் நீரால் கழுவி ஈரத்துடனேயே வில்போல் வளைத்துவிடவும்.

பட்டுப்போன்ற கண்ணடிக் கன்னம் பெறவும்; முகப்பருக்கள் நீங்கவும்

எலுமிச்சம்பழரசம், ஒலிவ் எண்ணெய், பன்னீர் இவற்றைச்சமமாக எடுத்து ஒன்றுகக்கலந்து இரவு படுக்கைக்குச்செல்லுமுன் தடவி, காலையில் எழுந்ததும் வெந்நீரால் கழுவி நன்றாகத் துடைத்துவிடவும். அத்தோடு காலையிலும், இரவிலும் காய்ச்சிய பசும்பாலாடையை முகத்தில் நன்றாக உள்ளங்கையால் அழுத்தித் தேய்த்து குளிர் நீரால் கழுவிவிடவும். கன்னம் ஊதி உப்பி அழகு பெற விரும்பின் முழங்கழுவும் வேளைகளிலெல்லாம் உள்ளங்கையால் நன்றாகத் தேய்த்துவிடவும். எலுமிச்சம்பழரசக்கலவை உபயோகிக்கும் காலங்களில் சோப் உபயோகிக்கக்கூடாது.

நீண்ட கிளிமூக்குப்பெற

அதிகாலையில் எழுந்ததும் சிறிது எண்ணெய் தடவி, நன்றாக இழுத்துவரவும். அத்தோடு முகப்பவுடர் பூசும்பொழுது மூக்கு நுனியில் சற்று பூசலாம்.

சிலருக்கு உதடு காய்ந்து வெடித்திருக்கும். இவர்கள் பகல் வேளைகளில் உதட்டிற்குச் சுத்தமான பசுநெய் தடவிக்கொள்ளலாம்.

அடுத்து பார்வையைக்கவருவது கூந்தலே. இதைப்பற்றி முந்தைய இதழ்களிலும் வெளியாகியிருந்தன. எனினும் நீண்ட அடர்ந்த கூந்தல்பெற, காலையிலெழுந்ததும் இரண்டு கைப்பெருவிரல்களாலும் தலையை முன்னிருந்து பின்னாக நன்றாக அழுத்தி மசாஜ் செய்துவிடவும். இன்னும் தேங்காயெண்ணெய் உபயோகிப்பவர்கள் அதனுள் ''வெட்டிவேரை''யும், வெந்தயத்தையும் ஊறவைத்துத்தேய்க்கலாம். இது தலைக்கு குளிர்ச்சியை ஊட்டி கூந்தலை வளரச் செய்யும். ''ஒலிவ்'' எண்ணெயில் எலுமிச்சரசத்துளிகள் விட்டு சூடாக்கி ஆறவைத்துச் சேர்க்கலாம். ஆனால் நம் நாட்டு சுவாத்தியத்திற்கும் நமது [illegible]லுக்கு நல்லெண்ணெயே உகந்தது. இதற்கு வெந்த

(10-ம் பக்கம் பார்க்க)

# செந்தமிழ் வளரச் சிவநெறி தழைக்க செயலாற்றும் செல்வி

பேட்டி: 'பூரணி'

''எனது இறுதி மூச்சுவரை சொற்பொழிவுகள் செய்யவிரும்புகிறேன். பெண்களின் வாழ்க்கைக்குப் பயனுள்ள சிலநூல்களை எழுதத் திட்டமிட்டுள்ளேன். நமது தமிழ்ப் பண்பாடு, நாகரிகம் மிகஉயர்ந்தது. தமிழ் உடைகளைச் சிலபெண்கள் வெறுக்கிறார்களென்றால் அது அவர்களது அறியாமையைக் காட்டுகிறது. ஆலயங்களில் அர்ச்சனைகள் வடமொழியில்நடைபெறுவதைத் தான் விரும்புகிறேன்'' என எமக்களித்த பேட்டியின் போது பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி குறிப்பிட்டார்.

சைவ, முஸ்லிம் கிறிஸ்தவ பாடசாலைகளில் ஆசிரியையாகப்பணியாற்றும்வாய்ப்பு எனக்குக்கிடைத்தது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். நான் இருபது ஆண்டுகளாக ஆசிரியையாகப்பணியாற்றி வருகிறேன். இராமநாதன் கல்லூரியில் படிக்கும்போதே தமிழிலும் சைவத்திலும் நிறைந்த பற்றுக்கொண்டிருந்தேன். விவேகானந்த சபையே சொற்பொழிவாளராக வருவதற்கு 'வாய்ப்பு அளித்தது. திருவாசகத்தில் இருபத்திநான்கு சொற்பொழிவுகள்வரை நிகழ்த்தியிருக்கிறேன். சமய நூல்களில் திருவாசகத்தையும் இலக்கியங்களில் திருக்குறளையும், இராமாயணத்தையும் சிறப்பாகப்போற்றி வருகிறேன் என்றார் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, கடந்த பத்து வருடங்களிலும் பார்க்கத் தற்பொழுது மாணவர்கள் கூடுதலான சமயப்பற்றுள்ளவர்களாக இருக்கிறார்கள். பிள்ளைகள் நன்கு சிந்திக்கும் ஆற்றல் உள்ளவர்கள் அவர்களைச் சமயத்தில் ஆர்வமுள்ளவர்களாகத் திசைதிருப்பச்செய்யவேண்டுமானால் நமது சமயம் ஒழுக்கத்தைப் போதிக்கிறது; மற்றவர்கள்மேல் அன்புகொள்ளச் செய்கிறது என்ற உண்மைகளைப்போதிக்கவேண்டுமேயன்றி விரத அனுஷ்டானங்களைக்காட்டிப் பயமுறுத்தக்கூடாது. மாணவ உலகம் சிறுகதையையும் சினிமாப்பக்கத்தையும் படித்துவிட்டு செய்தித்தாள், சஞ்சிகைகளை மூடிவிடுகின்றது. அவர்கள் பரந்த அறிவு பெறுவதற்கு அரசியல், சமூக, வெளிநாட்டுச் செய்திகளையும் படிப்பதற்கு ஆர்வமூட்டவேண்டும்.

வேதம்பூட்டிய திருமறைக்காட்டுக் கதவினைத் தேவாரம் திறந்தது. எனவே நமது தேனினுமினிய தேவாரதிருவாசகங்கள் பேராற்றல் மிக்கன. எனினும் எங்கள் ஆலயங்களில் வடமொழியில் அர்ச்சனை நடைபெறுவதையேநான்விரும்புகிறேன்.

சில சேலையில்லா த[illegible]கையர்கள் கடைவீதிகளில் சுற்றுகின்றனர். இஃது பெண் சமுதாயத்திற்குபெரு இழுக்கையுண்டாக்குகிறது. மேலைத்தேசத்தினர் கழித்துவிட்ட உடைகளை இன்றும் நம் நாட்டு நங்கையர்கள் விருப்புடன் அணிகின்றனர். அத்துடன் நமது உடை அலங்காரம், பொட்டிடுதல் ஆகியவற்றைப் பழையன, பட்டிக்காடு என ஒதுக்குகின்றனர். இவர்களுடைய அறியாமையைப்பார்த்து வேதனையடைகிறேன். போலி நாகரீகம், வறட்டுக்கௌரவம் பலகுடும்பங்களை நசுக்கி வருகின்றன. ஆடம்பரத்தில் ஈடுபடும் தாய்மார்களால் பிள்ளைகளை நன்கு பேணமுடியாது. இதனால் பிள்ளைகள் நல்லொழுக்கமுள்ளவர்களாக சிறந்த அறிவுடையவர்களாக எதிர்காலத்தில் திகழ வழியில்லாது போகிறது. இக்குடும்பத்தலைவிகள் தங்கள் சாப்பாட்டிற்கு உணவுவிடுதிகளையே நம்பு[illegible] யால் பாதிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருள் முதல் வாதம்

சடப்பொருள் (Matter) என்பது பற்றி விஞ்ஞானத்தில் கூறப்பட்டிருக்கிறது. சில நூல்களில் Materialism என்றொரு பதமும் காணப்படுகிறது. இப் பதத்தின் விளக்கம் என்ன?

எம்மைச் சுற்றியுள்ள பொருட்கள், அவை அண்மையில் உள்ள மேசை, கதிரை, பேனா போன்றவை ஆகுலென்ன, வெகு தூரத்தில் மின்னும் தாரகைகள் என்றுலென்ன நிஜமாகவே இருக்கின்றனவா? அல்லது அவை இருப்பதெல்லாம் எம் மனதில் தோன்றும் வெறும் பிரமையா?

அதாவது, 'பொருள்' எனப் பொதுப்படுத்திக் கூறக்கூடியவை யாவும் யதார்த்தத்திலேயே இருக்கின்றனவா? அவற்றின் பிரதிபலிப்பாகவே எமது மனதில் சிந்தனைகள் எழுகின்றனவா? அல்லது எமது மனதில் தோன்றும் சிந்தனையைப் பொறுத்தே பொருட்களின் சஞ்சரிக்கின்றனவா? எது முந்தியது? பொருளா, மனமா? பொருள் தான் என்று சொல்லி வாதிடுவது பொருள் முதல் வாதம் (Materialism) என்ற தத்துவம். இல்லை மனம்தான் என்பன இலட்சியவாதத் தத்துவங்கள். பிந்தியதைப் பன்மையில் கூறியதைக் கவனியுங்கள். ஆம். தர்க்கரீதியான பொருள் முதல்வாதம் ஒன்றுதான். இலட்சியவாதத் தத்துவங்களோ பல. பண்டு தொட்டு நிலவும் சமயத் தத்துவங்கள் தொட்டு நேர்காட்சிவாதம் (Positivism) உளதாம்வாதம் (Existentialism) போன்ற 'நவீன' தத்துவங்கள் ஈறாகப் பலதத்துவங்கள் இலட்சியவாதம் பேசுவன.

பகுத்தறிவு, தர்க்கம், விஞ்ஞானம் ஆகிய மூன்றுக்கும் ஒவ்வக்கூடிய ஒரே தத்துவம் பொருள்முதல் வாதம் மட்டுமே. இத் தத்துவத்தில் 'பொருள்' என்ற சொல் சாதாரண சடப்பொருள்களை மட்டும் குறிப்பிடவில்லை. பொருட்களை அவற்றின் எல்லா நிலைகளிலும் அவற்றின் எல்லாப் பண்புகள், தன்மைகளையும் அடக்கியே பொதுவாக 'பொருள்' என அழைக்கப்படுகிறது. உதாரணமாக கதிரியக்கம், மின்காந்த அலைகள் முதலியனவும் உயிரினங்கள், மக்கள் சமூகம் போன்றவையும் 'பொருள்' என்ற சொல்லினுள் அடங்கும்.

பொருள் இருக்கின்றது. இருப்பன அனைத்தும் பொருட்களே. இது இவ் வாதத்தின் அடிப்படை. அண்ட கோளத்தில் உள்ளவை, நிகழ்பவை, தோற்றுபவை அனைத்தையும் அறிந்து விட்டதாக பொருள் முதல் வாதம் வாதிக்கவில்லை. பதிலாக, அவை யாவும் அறியக் கூடியவை, அதாவது அறிவுக்கு எட்டக் கூடியவை (Knowable) என்றே அது வாதிக்கின்றது. இதனால் இயற்கைக்கு அப்பாற்பட்டவை அல்லது அறிவுக்கு எட்டாதவை எவையும் இருப்பதாகக் கொள்வதற்கு இடமில்லை.

பொருள் என்றும் நிலைப்பது! அதற்கு ஆதியோ அந்தமோ இல்லை. அதை ஆக்கவோ அழிக்கவோ இயலாது. இதனால் அதன் ஆக்கம் அல்லது அழிவு பற்றிய பிரச்சினையே எழ இடமில்லை. அதன் உருவத்தை மட்டுமே மாற்றலாம். சக்தியும் பொருளின் ஒருவித உருவமே. பொருள் (Matter) இல்லையெனில்; வெளி (Space) இல்லை; காலமும் (Time) இல்லை. இக் கருத்தை பிரிட்டனின் பிரபல விஞ்ஞானியான பிறட் ஹொயில் (Fred Hoyle) அண்மையில் ஆமோதித்திருக்கிறார்.

பொருள் இருப்பதற்கு அடிப்படை அதன் இயக்கம் அல்லது அசைவு. அணுக்களும் அசைகின்றன. அவற்றுள் உள்ள சிறு துகள்களும் அசைகின்றன. அசைவில்லையேல் பொருள் இல்லை.

அசைவு அல்லது இயக்கம் இருக்கும் வரையில் அதை ஒட்டி ஏற்பட வேண்டியது மாற்றம். மாற்றங்களின் தொடர்ச்சியே பரிணமம், அல்லது கூர்ப்பு (Evolution) பரிணமம் படிப்படியாகவும் சில சமயங்களில் சடுதியாகவும் (In Leaps) நிகழ்வதுண்டு.

பொருட்களுள் நிகழும் இயக்கம் அவற்றுள் உள்ள முரண்பாடுகளால் நிகழ்கின்றன. சில முரண்பாடுகள் முதிர்ந்ததும் அவை முற்றி, 'வெடித்து' பிற முரண்பாடுகளுக்கு இடம் தருகின்றன. இதுவே வளர்ச்சி அல்லது வளம்பாடு (Development).

அடிப்படை மூலகங்களில் இருந்தே அசேதனவுறுப்புப் பொருட்களும் இவற்றில் இருந்தே சேதனவுறுப்புப் பொருட்களும் பரிணமித்தன. சேதன உறுப்புப் பொருட்கள் பரிணமித்தே 'உயிர் உள்ள பொருட்கள் தோன்றின. "உயிர்" என்பது பொருளல்ல. பொருளின் ஒரு நிலைக்குள்ள இயல்பு (Property). உயிர்கள் பரிணமித்தே மனிதன் தோன்றினன் என்பது டாவின் கொள்கை. மனிதனே பொருளின் உச்சிநிலை அல்லது மேம்பாட்டுநிலை.

இத்துடன் நின்றுவிடவில்லை பரிணமம்! அது மனிதன் அமைத்துக் கொண்ட சமூகத்திலும் தொடர்ந்துள்ளது. இன்றும் தொடர்கின்றது. ஆம். மனிதசமூகத்தில் நிகழும் மாற்றங்களையும் சமூகத்தில் உள்ள பொருள் நிலைகளே நிர்ணயிப்பன என்கிறது பொருள் முதல் வாதம்.

பொருள் முதல் வாதம் என்று தோன்றியது? காலவரையறையைக் கூற இயலாது, மிகப்புராதன கிரேக்கத்திலும் இந்தியாவிலும் கூட பொருள் முதல் வாதத் தத்துவஞானிகள் வாழ்ந்தனர் என்பதற்குச் சான்றுகள் உண்டு.

— அறிவொளி விஞ்ஞான மாத ஏடு.

மாணவர்களே!

10-வது இதழ்

அறிவொளி

வெளிவந்து விட்டது.

- விஞ்ஞான ஆராய்ச்சிக்குத் தாய் மொழி தடையா?
- ''வாக்குண்டாம்''- செய்யுளில் வைத்தியக் குறிப்புகள் பொதிந்துள்ளனவா?
- ''நுவரேலியாப் பகுதியில் காடுகள் அழிக்கப்படுவதால் மழை வளம் குறைகின்றது'' —பத்திரிகை நிருபர் ஒருவரின் இச் செய்தியின் விளக்கம் யாது?
- மண் எண்ணை விளக்கை நோக்கி ஊதினல் ஏன் அணைகின்றது? விறகு தணலில் ஊதும் போது ஏன் சுவாலையுடன் எரிகிறது?
- சினிமா ஒளிப்படச் சுருளில் எப்படி ஒலிப்பதிவு செய்யப்படுகின்றது?
- அலுமினியத்தின் முக்கிய குணவியல்புகள் யாவை?
- மூலக்கூறுகள் பற்றிய கோட்பாடு எவ்வாறு தோன்றியது?

இக் கேள்விகளுக்கான விடையை

அறிவொளியிற் காணுங்கள்

தொடர்புகள்:

செயலாளர்

"அறிவொளி"

35/9, யோசேப் ஒழுங்கை

கொழும்பு-4.

ஆண்டுச்சந்தா ரூ 7/-

தனிப்பிரதி சதம் -/60

# பயிர்ச் செய்கைக்கு கடல் நீர்

ஆம், கடல் நீரால்பயிர் செய்யலாம் — மாயாவித்தையால் அல்ல—விஞ்ஞானத்தால்! இஸ்ரேலில் ஒரு வனாந்தரத்தின் கரையோரமாக உள்ள ஒரு பரிசோதனை தோட்டத்தில் டாக்டர் ஹியூகோ பொய்கோ (Dr. HugoBoyko) என்ற விஞ்ஞானி சில மல்பெரிச் செடிகள், ஓக் மரங்கள், ஒலியாண்டர் மூலிகை, மாதுளை முதலியவற்றை கடல்நீரைப் பாய்ச்சி வளர்க்கிறார். அவர் பயிர்கள் வளரும் படுகைகளை சிறிது பருமனான மக்கிக் கற்கள் (Gravel), மணல் தூர்வை (Silt) ஆகியவற்றால் இணக்கி உள்ளார். பாய்ச்சப்படும் கடல்நீர் இப்படுகையில் உள்ள சிறு துவாரங்களுக்கு ஊடாகச்சென்று அடியில் படிந்துவிடும். வனாந்தரத்தில் உள்ள கடும் வெப்பத்தால் அந்த நீர் ஆவியாகும். நீராவிஎப்பொழுதும் தூய்மையாகவே இருக்கும். (அதில் உப்பு இருக்காது). நீர் உட் சென்ற அதே துவாரங்களின் ஊடாக மேலெழும் நீராவி இரவின் குளிரில் மீண்டும் உறையும். அது பயிரின் வேர் மட்டத்தில் ஒரு பனிப்படலமாகப் படியும். அந்தப் பனியை உறிஞ்சி பயிர்கள் உயிர் வாழ்கின்றன. இத்திட்டம் தற்பொழுது பரிசோதனை நிலையிலேயே இருக்கிறது.

— அறிவொளி.

# 'இது' பொன்னும் காண் நீ'

## ஒரு சிறந்த காயகல்பப் பூண்டு — பொன்னுங்காணி

செடிகளின் இலைகளில்தான் இயற்கைதன்னுடைய சத்தைத்தேக்கி வைத்திருக்கிறது. பொன்னுங்காணிக் கீரையில் உண்மையான ஒளஷதங்கள் பெருவாரியாகக் காணப்படுகின்றன.

இது, இலங்கையில் எங்கும் பயிராகும் ஒருவகைப் பூண்டாகும். இதில் பச்சை சிவப்பு என இருசாதியுண்டு. இப்பூண்டு காயகற்பப் பூண்டாகும். இதைத் தேவர்களும்கூட தெய்வப்பூண்டாக மதித்துவருகின்றனர். இவற்றில் முக்கியமாக இருக்கும் பொருள்களைப் பார்த்தாலே தெரியும் கால்ஸியம், சோடியம், குளோரின், பாஸ்பரஸ், பெருமளவில் அயன், விட்டமின் ஏ, பி, ஸி, புரோட்டீன் - காநீரகையும் இவற்றைவிட அதிக அளவில் தங்க சத்தும்உண்டென்றும் இதை முறைப்படி உண்டுவருபவர்களுக்கு தங்கம் போன்ற மேனியைத் தரும் என்றும் பெரியார்கள் கூறியுள்ளனர்.

இஃது, இதன் பெயரினின்றும் அறிந்துகொள்ளற்பாலது. எவ்வாறெனில் பொன்னுங்காணி என்பது பொன்+ ஆம் + காண் + நீ- இதை உண்டால் உன் உடல் பொன்னுகக் காண்பாய் எனப் பொருள்படும்.

பொன்னுங் காணிபோன்ற கீரைவகைகளைப் ''பாதுகாப்பு உணவுகள்'' என்று சொல்வதற்குக் காரணம் அரிசிபோன்ற தானியவகைகளில் இல்லாத தாதுப் பொருட்களை அவைகொண்டிருப்பதினாலேயே. அவற்றில் [illegible] தாதுப்பொருள்களே அதிகம் இருக்கின்றன.

### பொன்னுங்காணியின் குணம்

''காசம் புகைச்சல் கருவிழி நோய் வாதமனற்
கசும் பிலீகங்கு தாங்குர
நோய்-பேசிலையா
வெல்லும் காணிப் படிவ
மேமாஞ்செப்பலெல்லை
பொன்னுங் காணிக்
கொடியைப் போற்று.''

பொன்னுங்காணியினால் விழியைப் பற்றிய வாதகாசம், புகைச்சல், வாயு அலன், ஈரல் நோய், கிழ்வாயிலுண்டாகும் நோய்கள் இவைகள் போவதல்லாமல் உடலும் பொன்னிறம் பெறும்.

— க. வேல்மணி —

குழந்தைகளுக்குப் பலவந்தப் படுத்தாமல் பொன்னுங்காணியை உணவோடு சேர்த்து உண்ணும்படிசெய்யவேண்டும். ஆரோக்கியமும் வளர்ச்சியும் ஒரு பிரச்சினையாக இருக்கும் நம் நாட்டில் இது முக்கியமாகக் கவனிக்கற்குரியது. ஏழைக் குழந்தைகளுக்குத் தாய்மார்கள் பால்வாங்கி ஊட்டமுடியாதே என்ற சந்தர்ப்பங்களில்பொன்னுங்காணியைக் கறியாகவும், அதன் சாற்றைப் பிழிந்து சூடுகாட்டி அதற்குள் கற்கண்டும் சேர்த்தபின் பிள்ளைகளுக்கு நன்கு பருக்கலாம்.

செழிப்பாய் வளர்ந்த பொன்னுங்காணிக் [illegible] செம்மையாக [illegible] வதக்கி மிளகு, உப்புக் கூட்டி கல்பமுறையின்படி ஒருமண்டலம் நாள் விதம் உணவில் சேர்ந்து உண்டுவருவராயின் உடலுக்கு அழகு, பொன்னிறம், நீண்ட ஆயுள், கண் குளிர்ச்சி முதலியவற்றைத் தருவதுடன், வலிமையும் ஏற்படும்.

### கண்ணிலுள்ள ரோகங்களுக்கு

இதை அரைத்து அடையாகச்செய்து, ஒரு நீர் நிறைந்த பானைமீது அப்பி மறுநாள் காலையில் இதை எடுத்துக் கண்களின் மீது வைத்துக்கட்ட கண் நோய்கள் தீரும். அல்லது நெய்விட்டு வதக்கிக் கண்களுக்கு கட்டநோய்கள் தீரும் அன்றியும் இதன் தைலத்தை தலையில் வைத்து முழுகிவர கண் நோய்கள் தீரும்.

இறுவயதில் குழந்தைகளுக்கு ஏற்படும் கிரந்தி ரோகங்களைத் தடுப்பதற்கு தாய்மார்கள் 6 மாதகாலம் குழந்தைக்குக் கொடுக்க வேண்டியது.

பொன்னுங்காணிச் சாறு- 1/4 படி. நல்நெய்-1/4படி. கறுத்தப் பூக்கொடிச்சாறு -8 அவுன்ஸ். சிறு அளவில் உள்ளி. ஈசுரமூலி-2 அவுன்ஸ்.

பொன்னுங் காணிச்சாறு, கறுத்தப் பூக்கொடிச்சாறு, ஈசுரமூலி (பெருமருந்துக் கொடி) முதலியவற்றை நன்கு நீர் வற்ற எரித்ததன் பின்னர் நல்நெய்யையும், உள்ளிச் சாற்றையும் [illegible] சிசாவில் அடைத்துக் காலை மாலை 4 சொட்டு வீதம் தலைக்குத் தேய்க்கவும். மாதம் ஒரு முறையோ இருமுறையோ 1/2 மேசைக் கரண்டி வீதம் குழந்தைக்குப்பருக்கவும், இது நன்மையைக்கொடுக்கும். இப்படிச் செய்வதால் ஒருவித கிரந்தி ரோகத்திலிருந்தும் பிள்ளையைப் பாதுகாக்கலாம்.

### தலையில் மயிர் உதிர்தல்; தேகச்சூடு உள்ளவர்கள்

பொன்னுங்காணிச் சாறு படி-2, நெல்லிச்சாறு படி-1, வெற்றிலைச்சாறு படி - 1/4, அதிமதுரம் பலம்-2, பசுப்பால் படி-1. இவைகளைக் கலந்து காய்ச்சித் தலையில் வைத்து முழுகிவர அழல் நோய், தலைமயிர் உதிர்தல் முதலியவற்றைப் போக்கலாம்.

தாய்மார்கள் நன்கு இக்கீரைகளை உணவுடன் சாப்பிடவேண்டும். இதனால் எல்லாவித உடல்ரோகங்களும் வராமல் விடுவதுடன் பொன்னிற மேனியுள்ளவர்களாகவும் மாறிவிடுவார்கள்.

''சிதையை நாடொறுஞ்
சீரண வுண்டிடத்
காதைசேர் நோயெலாங்
காதமோடிடுமே''

என்று கூறியுள்ளார்கள். இலங்கை மக்கள் நாள்விதம் சேரும் உணவில் பொன்னுங்காணிக்கீரையையும் சேர்த்தல் வேண்டும். மலச்சிக்கலால் கஷ்டப்படுபவர்கள் நன்கு இக்கீரையைச் சாப்பிடுங்கள். எப்பொழுதும் இடைப்பதுமல்லாமல் மலிவானதுமாகும்.

வைத்தியர்கள் இதன் சாற்றைக்கொண்டு எண்ணெய் வகைகள், லேகிய வகைகள் காய்ச்சுவதற்கும் பாவிப்பதுமல்லாமல் செம்மையை செந்தூரமாகச்செய்துவிடுகிறார்கள்.

### வாய்ப்புண் உள்ளவர்கள்

அனுதினமும் இதை உணவுடன் சாப்பிடுவதுமல்லாமல் நொச்சிச்சாறு, பொன்னுங்காணிச்சாறு, மஞ்சள் தூள் இவைகளை ஒன்று சேர்த்து இளம் சூடாக்கி வாய் கொப்பளிக்க எவ்வித வாய்ப்புண்ணும் வேறற்றுப் போகும்.

சொறி, சிரங்கு, படை முதலிய வியாதியஸ்தர்களும் பொன்னுங்காணியை நன்கு உணவில் சேர்த்தல் அவசியம்.

நாள்விதம் சிறுவர் தொடக்கம் பெரியோர்களுக இதைச் சூப்பாகவோ அல்லது சுண்டல், கறி முதலியனவாகவோ உணவில் சேர்ப்பது அவசியம்.

## ஒரு திருத்தம்

சென்றவாரம் (11-11-66 வாரமலரில்) வெளியான புங்குடுதீவு திவ்ய ஜீவன சங்கத்துசுவாமி சதானந்தா அவர்களின் தீபாவளிக் கட்டுரையில் சுவாமிகளது பெயர் சச்சிதானந்தா எனத் தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டமைக்கு வருந்துகிறோம். வாசகநேயர்கள் அப்பெயரை சுவாமிசதானந்தா எனத்திருத்திக்கொள்வார்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக மேடை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்துள்ள கிளர்ச்சிகளும் ஆர்ப்பாட்டங்களும் பலாத் காரச்செயல்களும் இந்தியா வைத்தவிர வேறு எந்தநாட் டிலும் நடந்திருக்குமானால் திரு. மாட்டின் கூறியிருப்ப தைப் போல் அங்குஜனநாய கம் நிலைத்திருக்காது. ஆனால் இந்தியாவில் ஜனநாயகம் ஒருவாழ்க்கைமுறையாகவே ஒன்றிப் போய்விட்டிருக்கி றது. பலதியாகங்கள்செய்து அது சுதந்திரம் பெற்றது.

ஆனாலும் சமீபகாலச்சம்ப வங்கள் இந்தியமக்கள் மன தில், ஆட்சிபீடத்தில் அதி ருப்தியை ஏற்படுத்தி, ஆட் சியில் மாற்றம் ஏற்படுத்த வேண்டுமென்ற மனப்பான் மையைத் தோற்றுவிக்கக் கூடும். ஆனால்காங்கிரசிற்குப் பதிலாக, ஆட்சிபீடத்திற் குத் தெரிவு செய்யக் கூடிய தகுதியாக பலம் வாய்ந்த கட்சி ஒன்று தனித்தன்மை யுடன் இந்தியாவில் இப் போது இருக்கிறதா?

## விண்வெளி சாதனை

அமெரிக்க விண்வெளி வீரர் இருவருடன் விண் வெளிக்குச் சென்ற "ஜெமினி-12" விண்வெளிக் கப்பல், சந்திரமண்டலயாத் திரைக்கான பல வாய்ப்புக் களை அறிந்துகொண்டு பூமிக் குத் திரும்பியிருக்கிறது. இக் கப்பலில் சென்ற அல்ட்ரின் என்ற வீரர் விண்வெளியில் அதிகநேரம் நடந்துசென்றி ருப்பதுடன் வான சாஸ்திரி களுக்குப் புதிராக இருந்து வரும் நட்சத்திரங்களைப் படம்பிடித்தும், விண்வெளிக் கப்பலுக்கு வெளியேஇருந்து வேலைகள் செய்யமுடியு மென்பதையும் தெரிந்து கொண்டு திரும்பியிருக்கி ரர். இன்னும் இரண்டு வரு டங்களுக்குள் விண்வெளிக் கப்பல் எதையும் விண்வெளி யாத்திரை ஆராய்ச்சிக்காக அமெரிக்கா அனுப்பப்போவ தில்லையாம். இரண்டுவருடங் களின்பின் சந்திர மண்டலத் துக்கு மனிதனை அமெரிக்கா அனுப்பும். அதாவது 1970-ம் ஆண்டிற்குள் சந்திரமண்ட லத்துக்கு மனிதனை அமெ ரிக்கா அனுப்பும் என்ற திட் டத்தை அது நிறைவேற்றி விடும். சோவியத் யூனியன் வெளி ஆராய்ச்சியில் [illegible] மாதங்களாக அக்கறை அதி கம் செலுத்தாதது போல் தோன்றுகிறது. திடீரென்று ஒருநாள் "சந்திரமண்டலத் தில் சோவியத் மனிதன் இறங்கி சமையல் செய்கி றான், சாப்பிடுகிறான்" என்று ரஷ்யா அறிவித்தாலும் அறி விக்கும். அதில் ஆச்சரியப் படவும் இடமிருக்காது.

## வனிதையர்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யம், தற்சிரம் போட்டுக் கொதிக்கவைத்து ஆறிய பின்னர் பூசலாம்.

இதனையடுத்து செங்காந் தள் மென்விரல்களையும் பார்வை நாடும். அதிகாலை யில் எழுந்து மணிக்கட்டில் இருந்து தேய்த்துவிடுவ துடன் கிரீம் பூசி விரல்களை நீவிவிட்டு மெதுமெதுவாக இழுத்தும் வரலாம்.

இப்படியே நமது ஒவ் வொரு உறுப்புகளையும் இயற்கை முறையில் அழகு படுத்திவிட்டு உடம்பைமட் டும் பூசினிப்பழம்போல் வைத்திருந்தால் அதிகாலையில் காற்றோட்டம் உள்ள இடத் தில் நம்மாலான தேகாப்பி யாசங்கள் செய்தல் அவசி யம். முழங்கால் மடக்காது உடலை முன்னும் பின்னும் வளைப்பதுடன் ஆரோக்கிய மான உணவுகளை அளவுடன் புசிக்கவேண்டும்.



★ வலிமை
★ குளிர்மை
★ சிக்கனம்
இவற்றிற்கு
பிரசித்தி பெற்ற யானை மார்க்
அஸ்பெஸ்ரஸ்
கூரை சிற்றுக்களேயே உபயோகியுங்கள்.
கிடைக்குமிடம்:
சண்முகம் ஸ்ரோர்ஸ்
( யாழ் நகரின் பிரபல இரும்பு வியாபாரிகள் )
222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 697

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்:-
○ பெனியன்
○ ஸ்போட் சேட
○ ரி சேட்
● ரெறி சேட்
● ரெறி பிளவுஸ்
● பேபி வெஸ்ட்
● காலமேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74 A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

## உங்கள் இராசி பலன்

எழுதுவது

சோதிட ஆசான் செ. தெல்லியூர்

Colombo Studio

(19—11—66 — 25—11—66)

### மேட இராசி

நிலை சீர்கேடு, தொழில் லாபம், ஐஸ்வரிய மேன்மை மதிப்புணர்ச்சி, பால் பக வஸ்திரலாபம், செய் காரியானுகூலம், விவகார வெற்றி, வர்த்தகத்தில் பணமுடக்கம், உத்தியோ கத்தில் இடப்பிரிவு, அதிகா ரிகள் உதவி, மாணவருக்கு மத்திமபலன், பெண்களுக்கு வஸ்திரசுகம், மாதுரு வழி உதவி, பணவரவுண்டாம்.

### இடப இராசி

குடும்பத்தில் கவலை, வயி ற்றில் ரோகபீடை, குடும்ப கலகம். இனசனப்பிரிவு, பிரயாண கஷ்டம், பொருள் அழிவு, அனாவசிய செலவி னங்கள் ஏற்படல், தாழ்வு மனப்பான்மை, நண்பரால் உதவி, வர்த்த கர்களுக்கு தொழில் மத்திம சுகம், உத்தியோகர்களுக்கு ஊழியரால் சங்கடம், தொழிலிடத்தில் விரோதம், பணமுடை, மாணவருக்குக் கல்விச்சிறப்பு, உடல்நலக் குறைவு, பெண்களுக்கு ஆரோக்கியக் குறைவு, அவ மானச் சொற் கேட்டல், ஏமாற்றமுண்டாம்.

### மிதுன இராசி

செய்கார்ய சித்தி, எடுத்த கருமங்கள் தாமதித்து நிறை வேறுதல், ஆலோசனைமிகுதி, பணம் கொடுக்கல் வாங்க லில் பிணக்கு, தெய்வவழி பாட்டில் ஈடுபாடு, மாணவ ருக்கு கல்வியில் ஊக்கம், பண உதவி, வர்த்தகர்க ளுக்குப் பொருள் நஷ்டம், உத்தியோகத்தர்களுக்கு வாக்கினால் கலகம், அதிகார விருத்தி, பெண்களுக்குகுடும் பவிரோதம், வயிற்றில் ரோகம், ஏமாற்றமுண்டாம்.

### கடக இராசி

செய்காரியத்தடை, இன சனக்கவலை, சத்துருவெற்றி, மதிப்புக்குறைதல், நண்ப ரால் கஷ்டவேளையில் உதவி கிட்டல், உதரரோகபீடை, பூமியினால்நன்மை, வஸ்திர சுகம், மாணவருக்கு கல்விச் சிறப்பு, வாக்குமேன்மை, வர்த்தகருக்குபொருள்வரவு உத்தியோகத்தருக்கு அதி கார விருத்தி, அதிகாரிகள் ஆதரவு, பெண்களுக்கு சந் தோஷம், ஐஸ்வரியவிருத்தி. சிநேகித நன்மை, இடை யிடை ரோகபீடையுண் டாம்.

### சிங்க இராசி

இனபந்துக் கலகம், கடன் பயம், அந்நியரால்சுகம், சகோ தரவழி நன்மை, நண்பரால் உதவி. இனபந்துக்களால் வீண்செலவு, மனச்சஞ்சலம், அவமானச்சொற் கேட்டல், மாணவருக்கு கல்வித்தடை, தெய்வ வழிபாடு, வர்த்தக ருக்கு பொருள்வரவு, உத்தி யோகத்தருக்குமத்திமசுகம். பெண்களுக்கு சரீரசுகக் குறைவு, வாக்குக்கலகம், குடும்பத்தில் பணவரவு, பிர யாணமிகுதியுண்டாம்.

### கன்னி இராசி

எதிர்பாராத வழிகளில் செலவு, பிரயாணச்சங்கடங் கள், பொருள் அழிவு, அந்நி யரால் உதவிகிட்டல், வயிற் றில் ரோகபீடைகாணல், பிர யாசமிகுதி, மாணவருக்கு ஊக்கக்குறைவு, கல்வித் தடை, வர்த்தகருக்குதொழி லில் பணமுடக்கம், உத்தி யோகத்தருக்கு அதிகாரச் சிறப்பு, பதவி அல்லது அந் தஸ்தில் மாற்றம், பெண்க ளுக்குவஸ்திராபரணலாபம், புதிய அந்தஸ்து, ரோக பீடை உண்டாம்.


### துலா இராசி

மாதுருபிதுருவழி மனக் கவலை, ஸ்திரீபீடை, அடிமை நிவர்த்தி, செய்காரியத் தடை, கொடுக்கல் வாங்கற் பிணக்கு, சரீரநலிவு, வம்பு வழக்கு விவகாரம், வர்த்த கருக்கு பணமுடை, ஊக்கக் குறைவு, உத்தியோகத்த ருக்கு தொழிலில் சங்கடங் கள், [illegible] மாணவருக்கு [illegible] குறைவு, [illegible] கவலையுண்டாம்.

கஷ்டம், பெண்களுக்கு சரீரரோகபீடை, வீண்குறை கேட்டல், குடும்பத்தில் உதவி, பணமுடையுண்டாம்.

### யந்திர வழிபாடு


சென்ற வாரம் வெளி யான 'சித்த மருத்துவம்' என்ற கட்டுரையில் குறிப் பிடப்பட்ட 'ஷட்சக்கர' யந்திரத்தின் அமைப்பும் 'பஞ்சாட்சர' யந்திரத் தின் அமைப்பும் கீழ்த்த ரப்பட்டுள்ளன.




### ஷட்சக்கர யந்திரம்

முருகக்கடவுளை வாலா யம் செய்யும் இந்த யந் திரமும், சிவபெருமானை வழிபடும் கீழேயுள்ள பஞ்சாட்சர யந்திரமும் இன்னும் பல யந்திரங்க ளும் கோயில் மூலஸ்தா னங்களின் ஆதி பீடத் தின் அடியில் புதைக்கப் பட்டிருக்கின்றன.

முற்காலத்து சித்தர்கள் தங்கள் சித்த வைத்திய முறைகளில் 'மணி மந்திர ஔஷதம்' என்பதில் இரண்டாவதான மந்திர ங்களையும் வெற்றிகர மாக உபயோகித்து வந் தார்கள்.




### பஞ்சாட்சர யந்திரம்

ஒரு குறிப்பிட்ட சில எழுத்துக்களையும் எழுத் துக் கூட்டங்களையும் திரு ப்பித் திருப்பி அநேகம தரம் உச்சாடனம் செய் யும் போது அதில் எழும் நாத ஒலிச் சேர்க்கையா னது மனிதரால் காண முடியாத அற்புதமான தேவதா சக்தியை எழுப் புகிறது. அந்த சக்தி யைக் கொண்டு பல வித நோய்கள் கட்டுப்படுத் தப்பட்டன.

### விருச்சிக இராசி

உடல்நலிவு, ரோகபீடை, பிரயாணக்கஷ்டம், வாகன நட்டம், சுபகருமங்கள் நடக் கும் வேளையில் கஷ்டபலன் களும் நடத்தல், பணநட் டம், பூமிப்பலிதம், தாழ்வு மனப்பான்மை அதிகரித் தல், வர்த்தகருக்குதொழில் விருத்தி, உத்தியோகத்த ருக்கு அதிகாரிகள் உதவி, ஊழியரால் நன்மை, மாண வருக்கு துட்டரால் கவலை, புத்திமத்திமம், பெண்க ளுக்கு குடும்பச்சிறப்பு, இன சனத்தால் கவலை, சத்துரு பீடையுண்டாம்.

### தனு இராசி

சரீரசுகக்குறைவு, வஸ்தி திர நன்மை, போசனசயன சுகம், செய்காரியசித்தி, நல்லவாக்கு, வெற்றி, வர்த் தகருக்கு வருமானமதிகரி ப்பு, பொருள்முடக்கம், உத் தியோகத்தருக்கு பிரயாச மிகுதி, சத்துருரோகபீடை, வாக்கு வசீகரம், மாணவ ருக்கு கல்விச்சிறப்பு, வாக்கு மேன்மை, பெண்களுக்கு பிரயாணக்கஷ்டம், குடும் பத்தில் சுகம், பணவரவுண் டாம்.

### மகர இராசி

செய்காரிய வெற்றி, பண வரவு, சரீர சுகம், சத்துருக் களால் இடையிடை கஷ் டம், குடும்ப கஷ்டம், பந்து சனங்களால் வீண் தண்டச் செலவுகள், மனக்கிலேசம், வர்த்தகருக்கு தனலாபம், பொருள்-கடன்கள் வரவு, உத்தியோகத்தருக்கு பல விதமான பொருள்களும் சேர்க்கை, மாணவருக்கு நடைக் கஷ்டம், புத்தி விரு த்தி, பெண்களுக்கு சயன போசனசுகம், பெண்களால் நன்மை, உடல் நலிவுண் டாம்.

### கும்ப இராசி

சபலசித்தம், மனச்சஞ்சலம் அதிகரிப்பு, தொழில்சிரமம், பொருள் வீண் செலவு, சத் துருக்கள் தொல்லை அதிகரி ப்பு, வீண் வாக்குவாதம், ரோக பீடை, மாணவருக்கு கல்வியில் ஊக்ககுறைவு, வர்த்தகர்களுக்கு செய்கா ரியத்தடை. பணமுடக்கம், உத்தியோகத்தருக்கு சத்து ருக்களால் தீங்கு, அதிகாரி கள் பகை, மனக்கசப்பு, பெண்களுக்கு வஸ்திராபர ணலாபம், ஏமாற்றம், இன சனக் கவலையுண்டாம்.

### மீன இராசி

பிரயாணக் கஷ்டம், பொருள்முடை, செய் தொழில் தடைப்படல், அதி காரிகளால் தொல்லை காணல், கொடுக்கல் வாங் கலால் கஷ்டம், நண்பரால் நஷ்டம், ரோகபீடை, மாணவருக்கு கல்வித்தடை, பணமுடை, இனபந்துக்களி னால் சச்சரவு, வர்த்தகருக்கு ஏமாற்றம், பணமுடக்கம் பயன்தராமை, உத்தியோ கத்தருக்கு எதிர்பாராத வழியில் உதவி கிட்டல்,

வடயாழ்ப்பாணத்தில்
இரவு பகல் சேவை செய்யும்
ஒரே ஒரு
ஸ்தாபனம்
உவாட் அன் டேவி
( ஆங்கில மருந்துச்சாலை )
148, நாவலர் வீதி, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## நீர்வேலிக் கிராமசபை
## அறிவித்தல்

நீர்வேலிக் கிராமசபை சித்த ஆயுள்வேத இலவச வைத்தியசாலைக்கு 1967-ம் ஆண்டுக்குத் தேவையான சித்தஆயுள்வேத முறைப்படி தயார் செய்யப்பட்ட மருந்து வகைகளும், செந்தூரம், லேகியம், சூரணம், பஸ்பம் முதலியனவும், எண்ணெ வகைகள், தயில வகைகள், தலை இடிப்பாசம், புண் மருந்து வகைகள், ஆசவம், அரிஸ்டம், கசாயம், கோரோசனை, குங்குமப்பூ, கஸ்தூரி மற்றும் மருந்துச் சரக்கு முதலியனவும் விநியோகிக்க விரும்புவோர் தங்களின் விலைப்பட்டியலை நீர்வேலிக் கிராமசபைத் தலைவர் அவர்கட்கு 2-12-66 திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கும்படி இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். குறித்த திகதிக்குப்பின் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இங்ஙனம்,
க. குலசிங்கம்
தலைவர்.
கி. ச. நீர்வேலி.

எமது இல. வி. சி. என்.64,
கிராமசபை அலுவலகம்,
நீர்வேலி,
16-11-66. 1390

## திருமணம்



திரு. தி. மகேந்திரன் அவர்களுக்கும் (பி. எல். டிஸ்பென்சரி, யாழ்ப்பாணம்) செல்வி வி. இரத்தினமணிக்கும் (சிறுவர் இல்லம் அரியாலை) அண்மையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. 1394

## கேள்வி விளம்பரம்

மூளக்கன் கடலையில் புதிய மடம் கட்டுவதற்குச் சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் அச்சுவேலி கிராமசபை அக்கிராசனரால் 3-12-66ந் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணிவரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப் பிணைப்பணம் ரூபா 25/-ம், பத்திரப்பணம் ரூபா 5/-ம் கட்டியதன்பேரில் 2-12-66ந் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரையும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

ஏனைய விபரங்களை கி. ச. கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

சி. த. சபாரத்தினம்,
தலைவர்,
கிராமசபை,
அச்சுவேலி.


கிராமசபைக் கந்தோர்,
அச்சுவேலி,
17-11-66 1392


**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
சுபோயா தினங்களில் 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி
நடித்த
**ஆசை அலைகள்**

**REGAL—JAFFNA**
**NOW SHOWING**
James Stewart
Rosemary Forsyth
in
**SHENANDOAH**

**2வது வெற்றி வாரம்!**

கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை) — நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) — விஜயா (மட்டக்களப்பு) — ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)
மொடேர்ண் (பண்டாரவளை) — மொடேர்ண் (பதுளை) — விஜிதா (ஹட்டன்)



**சிவாஜி கணேசன், தேவிகா**
சந்திரபாபு, புஷ்பலதா, அசோகன், பாலாஜி,
நாகையா, ஏ. வி. எம். ராஜன்
ஜாவர் சீதாராமன், பி. எஸ். வீரப்பா
நடிக்கும்
**ஆண்டவன் கட்டளை**
இசை: விஸ்வநாதன் இராமமூர்த்தி
டைரக்ஷன்: சங்கர்


# ரொடீஷியாவில் படைபலம் உபயோகிக்க வேண்டும்
## ஐ நா. தீர்மானம்

ஐ. நா. நியூயோர்க், நவ. 18

ரொடீஷியாவில் சட்ட விரோத சிமித் ஆட்சியை முடிவுக்குக்கொண்டுவருவதற்கு படைபலத்தையும், வன்முறையையும் பிரிட்டன் உபயோகிக்கவேண்டுமென்று வலியுறுத்தும் பிரேரணையை ஐ. நா. மகாசபை ஏற்றுக்கொண்டுள்ளது.

ஆசிய ஆபிரிக்க நாடுகள் நேற்றுக் கொண்டுவந்த இத்தீர்மானத்துக்கு ஆதரவாக 89 நாடுகள் வாக்களித்தன. தென்னுபிரிக்கா, போர்த்துக்கல் ஆகிய இரு நாடுகளும் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தன. பிரிட்டன், பிரான்ஸ் உட்பட 17 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

# கம்யூனிஸ்ட் நாடுகளிடம் அதிக உதவி பெறப்படும்
## அரசாங்கம் ஆலோசனை

கொழும்பு, வெள்ளி

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்தும், கம்யூனிஸ்ட் நாடுகளில் இருந்தும் அதிகமான உதவிகளைப் பெறுவது பற்றி அரசாங்கம் இப்போது ஆலோசித்து வருவதாகத் தெரிகின்றது.

இதுவரை மேற்கத்திய நாடுகளையும் கம்யூனிஸ்ட் அல்லாத நாடுகளையுமே அரசாங்கம் உதவிக்கு எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. ஆனால் அந்த நாடுகளில் இருந்து கிடைக்கும் உதவிகள் நாட்டின் தேவைக்கும் திட்டங்களைச் செயல்படுத்தவும் போதாது என்று கருதப்படுவதால் இப்போது வேறு நாடுகளில் இருந்து அதிகமான உதவியைப் பெறுவதற்கு அரசாங்கம் ஆலோசிக்க ஆரம்பித்துள்ளதாகத் தெரிகிறது.

ஏற்கனவே சில கம்யூனிஸ்ட் நாடுகள் இலங்கைக்கு உதவியளிக்க முன்வந்துள்ளன. அவைகளில் கிழக்கு ஜேர்மனியும் ஒன்றாகும்.

திருமதி பண்டாரநாயகாவின் கூட்டாட்சியின்போது இந்த உதவி உறுதியளிக்கப்பட்டிருந்தது ஆனால் அது பற்றி அக்கறைசெலுத்தப்படாமலிருந்தது. இப்போது இந்த உதவியைப் பயன்படுத்த அரசாங்கம் ஆலோசிக்கின்றது.

## கூப்பன் யாருடையது?

யாழ்ப்பாணம், சனி

மானிப்பாய் வீதியில் கூப்பன் ஒன்று திரு. எஸ். செல்லையா என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அத்தாட்சியுடன் கூப்பனைப் பெற்றுக்கொள்ளலாம்.

## ரங்கானந்தஜீ சொற்பொழிவு

யாழ்ப்பாணம், சனி

கல்கத்தா இராமகிருஷ்ண மிஷன் செயலாளர் ஸ்ரீமத் சுவாமி ரங்கானந்தாஜீ, வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நாளை மாலை 'கீதையின் உள் நோக்கம்' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார்.

## பாராட்டுக்கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

சமாதானநீதவான் பட்டம்வழங்கப்பட்டதை முன்னிட்டு திரு. து. சீனிவாசகத்துக்கு வரும் திங்கட்கிழமை மாலை, வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் பாராட்டுக்கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கிறது.

டாக்டர் வி. ரி. பசுபதி தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், திருவாளர்கள் எஸ். ஆர். கனகநாயகம், எஸ். அம்பிகைபாகன், ஆர். இராசரத்தினம், என். சபாரத்தினம், எஸ். மகேஸ்வர ஐயர், எஸ். பரநிருபசிங்கம், முதலியார் சி. முத்துத்தம்பி ஆகியோர் பாராட்டுரை வழங்குவார்கள்.


**யாதவா**
(மூளாய்)
தினசரி 6-30, 9-30
விடுமுறை நாட்களில் 2-30 மணி
சிவாஜி - சாவித்திரி
நடித்த
**காத்தவராயன்**

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி
நடித்த
**நானும் ஒரு பெண்**

**மகாத்மா தியேட்டர்**
(தெல்லிப்பழை)
தினசரி 6-30, 9-30
போயா தினங்களில் காலை 10 மணி
சிவாஜி—சாவித்திரி
நடித்த
விஜயமும் காண்பிக்கப்படும


## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

காணி

யாழ்ப்பாண இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நிலம் முழுவதும் சீமெந்தால் பதிக்கப்பட்டிருக்கிறது. தொடர்பு கொள்ளவும்: க. ஆதித்தன், 465, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1498

### தேவை

விற்பனையாளர்

எமது ஸ்தாபனத்திற்கு விற்பனையாளர் ஒருவர் தேவை. S. S. C. படித்தவரும், நல்ல ஆங்கில அறிவுடையவருமாக இருத்தல் வேண்டும். ரொக்கப் பிணைப்பணம்: ரூபா 1500/-. தொடக்கச் சம்பளம்: ரூபா 125/- சகல படிகளுமுட்பட. விண்ணப்பிக்கவும்: நோர்தேன் இண்டஸ்ரீஸ், 8/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1497

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, பிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றறிக்கை இலவசம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வருகிறார்கள். சித்த டாக்டர் பரிபூரணானந்தர் J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

# "உபகாரச் சம்பளம் பலருக்கு வேண்டும்"
## அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, வெள்ளி

இலங்கைக்கு வழங்கப்படும் சாம்ராஜ்ய உபகாரச் சம்பளம் போதாதென, கல்வி கலாச்சார அமைச்சர் திரு ஐ எம். ஆர். ஏ இரியகொல்லை, தம்மை நேற்றுச் சந்தித்த சாம்ராஜ்ய தலைமைக் காரியதரிசி திரு. ஆர்னல்ட் ஸிமித்திடம் கூறினார்.

இப்போது சாம்ராஜ்ய உபகாரச் சம்பளம், இருபத்துப் பேருக்கே கிடைப்பதாகவும், இன்னும் கூடுதலாக வழங்கவேண்டுமெனவும் அமைச்சர் திரு. ஆர்னல்ட் ஸிமித்திடம் கேட்டுக்கொண்டார்.





சென்ற். அந்தோனிஸ் குறூப்
516, ஸ்கினேர்ஸ் வீதி, தெற்கு,
கொழும்பு—10.
டெலிபோன்: 4261
4262.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரசாரம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

உருப்பெருமல் போவது இங்கு சர்வ சாதாரணம். எனவே அரசியல் கட்சிகள், இப்போதுள்ள சமூகக் குறைபாடுகள் நீக்கச் சட்டத்தில் தகுந்த திருத்தம் கொண்டு வருவதில் அல்லது புதியசட்டம் கொண்டுவருவதில் ஈடுபடுவதே சிறந்தது. மக்கள் மத்தியில் பிரசாரமூலம் மனமாற்றம் ஏற்படுத்தும் பொறுப்பு கட்சி அரசியலில் ஈடுபடாதவர்களிடம் விட்டு விடுவதே சிறப்பு.

## வாக்கெடுப்பு நடத்தலாம்

சிலவருடங்களின்முன் ஒரு கிராமத்தில்- அராலி என்று ஞாபகம்-ஆலயப் பிரவேசத்துக்கு அப்பகுதி மக்கள் மத்தியில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு தீர்மானிக்கப்பட்டது. இது மனக் கசப்புக்கு இடமளிக்கமாட்டாது. இது ஜனநாயக தர்மமாகும். அமைதியானமுறையில்பிரச்னைக்கு முடிவுகாணலாம். ஒவ்வொரு கிராமத்திலும் இந்த நல்ல காரியத்தைச் செய்யலாம். அரசாங்க அதிபரே இதற்கும் சுலபமாக ஒழுங்கு செய்யமுடியும்.

## தி. மு. க. வும் இலங்கையும்

இந்தியாவில் திரு. சி.என். அண்ணாதுரை தலைமையிலுள்ள திராவிடமுன்னேற்றக் கழகத்தைக்கண்டு இலங்கையில் சில அரசியல்வாதிகள் மிரண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு சில பத்திரிகைகளும் பக்கபலமாக நின்று 'பூச்சாண்டி' காட்டுகின்றன. தி. மு. க. என்ற பெயரைக் கேட்ட உடனே இங்கு சிலருக்கு சிம்ம சொப்பனமாக இருக்கின்றது. தி. மு. க. இப்பொழுது ஓர் அரசியல் ஸ்தாபனம். தமிழ்நாட்டில் பலம் வாய்ந்த ஒரு எதிர்க்கட்சியாக அது விளங்குகிறது. அடுத்ததேர்தலில் அது தமிழ்நாட்டில் ஆட்சிபீடத்திற்கு வந்தாலும்கூட தமிழ்நாட்டில் ஆட்சிபுரியும் உரிமையைக் கொண்டிருக்கும். அதாவது இந்தியாவில் உள்ள பல்வேறு ராஜ்ய அரசாங்கங்களைப் போல் தமிழ்நாடு ராஜ்ய அரசாங்கமும் இருக்கும். இந்திய மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ்த்தான் அது இயங்கும். மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டை மீறி நடந்தால், ராஜ்ய அரசாங்கத்தைக் கலைத்து, ராஷ்டிரபதி ஆட்சியைப்பிரகடனப்படுத்தலாம். எனவே தமிழ்நாட்டில் தி. மு. க. ஆட்சி ஏற்பட்டால் இலங்கை மீது படையெடுக்கும் என்று அஞ்சுவது அறியாமை. தி. மு. க. வுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாகவும் தி. மு. க. இந்தியாவில் தனி நாடு கோருவதும் இலங்கையில் தமிழரசுக் கட்சி "தமிழ் ராஜ்யம்" அமைக்க முயற்சி செய்வதும் "அகண்ட தமிழ் ராஜ்யம்" அமைப்பதற்கான தமிழரின் ஒரு திட்டம் என்றும் இங்கு கூறுகிறார்கள். தி. மு. க. திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டுவிட்டது. திராவிடநாடு அமைப்பதற்கு அங்கு ஆந்திரர், கன்னடியர், கேரளத்தினர் ஒப்புக்கொள்ளவில்லை; ஒப்புக்கொள்ளும் அறிகுறியும் இல்லை. இலங்கையில் 'சமஷ்டி' ஆட்சி அமைப்பு வேண்டுமென்றுதான் தமிழரசுக்கட்சி கோருகிறது. சமஷ்டிக் கோரிக்கைக்கு வடக்குக்கிழக்கு மாகாணங்கள் இன்னும் பூரணமாக ஒப்புக்கொள்ளவில்லை. இது தவிர 'சமஷ்டி' என்பது பிரிவினையும் அல்ல. இது அரசியல் தெரிந்தவர்களுக்குத் தெரியும். ஆனால் தெரிந்தும் தெரியாதது போன்று நடந்துகொள்பவர்களை எதுவும்செய்ய முடியாது. தி. மு. க. தலைவர்கள் தமிழர்கள்; தமிழ் அறிஞர்களும் கூட, தமிழரசுக்கட்சித் தலைவர்களும் தமிழர்கள். தமிழர் தமிழரை சந்திக்கக்கூடாதா? தொடர்பு கொள்ளக் கூடாதா? சோவியத்யூனியன் ஒரு நாடு. அங்கு ஆட்சியிலிருப்பது கம்யூனிஸ்ட் கட்சி. சீனவும் அப்படியே. இங்குள்ள கம்யூனிஸ்ட்கட்சியினர் சோவியத்கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டுக்கு செல்கின்றனர். சீன கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டுக்கும் செல்கின்றனர். சிலர் அடிக்கடி செல்கின்றனர்.

## காமராஜர் கூறும் விளக்கம்!

தி. மு. க. பூச்சாண்டி காட்டுபவர்களுக்கு இந்திய தலைவர் திரு. காமராஜர் "தி. மு. கழகத்தையிட்டு அதிகம் கவலைப்படவேண்டியதில்லை. அவர்களில் ஒன்றுமே இல்லை. அவர்களையிட்டு எவரும் பயப்படத் தேவையில்லை" என்று கூறியிருக்கிறார். இலங்கையில் தி. மு. க. வால் நீட்டாது என்றும் இலங்கையர்கள் தி. மு. க. வைக் கண்டு அஞ்சவேண்டியதில்லையென்றும் காமராஜர் கூறியிருக்கிறார்.

இலங்கை செனட்சபையிலும் சில தினங்களுக்கு முன் தி. மு. கழகத்துக்கும் தமிழரசுக்கட்சிக்கும் தொடர்பிருக்கிறதென நிரூபித்தால், தான் தமது பதவியை ராஜினாமாச்செய்வதாக செனட்டர் மாணிக்கம் சவால்விட்டதும் குறிப்பிடத்தக்கது. எவர், என்ன தான்சொன்னாலும் உண்மை தெரிந்தும் அதை ஒப்புக்கொள்ள மறுப்பவர் [illegible] எழுப்பலாம்; ஆனால் [illegible] பாசாங்குச் [illegible] வலை எழுப்பமுடியுமா?"

## மரண அறிவித்தல்

### எம். கைலநாதன்

திரு. எம். கே. மாணிக்கம் (ஓய்வு பெற்ற ரயில்வே பிறிஜ் பரிசோதகர்) அவர்களின் அருமை மகனும் டாக்டர் ஜெகநாதன் (மாகோ), விஸ்வநாதன் (வைத்திய மாணவன்) ஆகியோரின் அருமைச் சகோதரரும் பல் வைத்திய நிபுணர் டாக்டர் திருஅருள் அவர்களின் மைத்துனருமான யவர் அன்கோ கணக்காளர் திரு. எம். கைலநாதன் அவர்கள் காலமாகிவிட்டார். அன்னாரது பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக நாளை (20-11-66) காலை 8-30 மணிக்கு மானிப்பாயிலுள்ள மூளாய்விலிருந்து எடுத்துச் செல்லப்படும். 1167

## மரண அறிவித்தல்

### பத்மாவதி

மல்லிபுரம் (பகிர தபால் கந்தோர்) அவர்களின் அருமை மனைவியும், சபாரத்தினம், இராஜாநிய ஒவசியர், இரத்தினவதி, கரவெட்டி, அவர்களின் அருமைப் புதல்வியுமாகிய பத்மாவதி காலமாகிவிட்டார்கள். பூதவுடல் இன்று19—11—66 சனிக்கிழமை காலை 10 மணிக்கு கரவெட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். 1059

## கூட்டுறவுக் கருத்தரங்கம்

யாழ்ப்பாணம், சனி

யாழ். மாவட்டக் கூட்டுறவுத் துறைமுகச் சேவைச் சமாசத்தின் கருத்தரங்கம் இன்று காலை யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாகும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா கருத்தரங்கை ஆரம்பித்துவைப்பார். இக்கருத்தரங்கு நாலையும் தொடர்ந்து நடைபெறும்.

இன்று காலை 9-15 மணிக்கு அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா, கூட்டுறவுக் கொடியை ஏற்றிவைப்பார். 9-30 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுத் துறைமுகச் சேவை சமாஜத் தலைவர் திரு. ஜே. எவ். சிம்மறிங்கம் வரவேற்புரை நிகழ்த்துவார். இதை தொடர்ந்து அரசாங்க அதிபர் உரைநிகழ்த்துவார்.

காலை 11 மணிக்கு சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. ஏ. பெருமையினார் விரிவுரை நிகழ்த்துவார். திருவாளர்கள் கே. எஸ். பொன்னுத்துரை, எம். பதிஞாலசிங்கம் ஆகியோரும் விரிவுரை நிகழ்த்துவார்கள்.

## குழந்தைகள் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாங்கத்தைப் பார்த்துத்தான் அவர்கள் ஏளனமாகப் பேசிக்கொள்கிறார்கள்.

வெளிநாட்டிலிருந்துஇறக்குமதி செய்யப்பட்ட டின்னில் அடைக்கப்பட்ட பன்றி இறைச்சியும், மாட்டுஇறைச்சியும் ஒரு கடையில் அடுக்கப்பட்டிருந்ததை நான் தேடிப் பார்த்தேன். அந்நிய செலாவணி இப்படி அநியாயமாக வீணாக்கப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் ஆர்டர்செய்ததுஅரசாங்கத்துக்கு விரோதமான சில அரசாங்க அதிகாரிகளே.

## நாம் கடத்தப்பட்டு. . .

(1-ம் பக்க தொடர்ச்சி)

ரட்ண வீரக்கொடி ஆகியவர்களே இச்சிறுவர்கள்.

வெள்ளவத்தை பஸ் நிலையத்தில் பஸ்ஸுக்காகக் காத்து நின்ற போது இரு கார்கள் வந்து தமக்கு அருகே நிறுத்திக் கொண்டனவென்றும், பின்னர் தம்மை அக்காருக்குள் ஏறிக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார்களென்றும், மறுக்கவே பலாத்காரமாக காருக்குள் ஏற்றிக்கொண்டு அம்பலாங்கொடையிலுள்ள முதலாளியின் வீட்டில் இறக்கப்பட்டதாகவும் சிறுவர்கள் தெரிவித்தனர். பின்னர் அந்த முதலாளியிடமிருந்து கார்க்காரர்கள் காசு பெற்றுக் கொண்டதைப் பார்த்ததாகவும், தாம் எப்படியோ தப்பி காலிக்கு ரயிலில் வந்து டாக்டர் தகநாயக்காவின் இல்லத்திதுக்குள் புகுந்து கொண்டதாகவும் கூறி அவர்கள் தமது கதையை முடித்துக் கொண்டனர்.

மந்திரி டாக்டர் தஹநாயக்கா இந்தச் சிறுவர்களின் கதையைக் கேட்டு விட்டு, உடனடி விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க காலி பொலிஸ் அதிகாரிக்கும், அம்பலாங்கொடை பொலிஸுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

## 'நாட்டின் வளர்ச்சி பெண்களின் முன்னேற்றத்தில் தங்கியுள்ளது'

— சாவகச்சேரி எம். பி.

கொடிகாமம், வெள்ளி

"ஒரு நாட்டின் வளர்ச்சி அந்நாட்டின் பெண்களின் முன்னேற்றத்திலும் தங்கியுள்ளது. ஜெர்மனி, இந்தியா ஆகிய நாடுகளின் அரசியல் சரித்திரத்தை நாம் புரட்டிப் பார்ப்போமானால் இவ்வுண்மையை அறிய முடியும்".

இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் நாவற்காடு-இயற்றாலை மாதர் முன்னேற்றச்சங்கக் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

திரு. வி. என். நவரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

பெண்கள் நாட்டின் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதாலும், பொருளாதாரத்தை வளர்ப்பதிலும் முன்னின்றிருக்கிறார்கள் என்பதற்கு பல நாட்டு சரித்திரங்கள் சான்று கூறுகின்றன. நம் நாட்டுப் பெண்மணிகளும் அவர்கள் பாதையிற்சென்று நாட்டை வளம்படுத்தவேண்டும்.

## "சாதிப்பாகுபாட்டை நீக்க சட்டம் இயற்றவேண்டும்"

### சிங்கள எம். பி. வலியுறுத்துவார்

யாழ்ப்பாணம், சனி

சாதிப் பாகுபாட்டை ஒழிக்கச் சட்டம் இயற்ற வேண்டுமெனச் சிங்கள எம். பி. ஒருவர், அடுத்த அரசாங்கப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்துவாரென நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இம் மாதம் 23ந் தேதி புதன்கிழமை காலை அலரி மாளிகையில் நடைபெறவிருக்கும் அரசாங்கப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் மேற்கண்ட விஷயத்தை ஒரு பிரேரணையாகக் கொண்டுவர அவர் தீர்மானித்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

சாதிமுறை, சாதிப்பெயர், சாதிப் பெயருள்ள விதிகள், கிராமங்களை மாற்றவும், சாதிப் பாகுபாட்டை முற்றாக ஒழிக்கவும், சட்டம் இயற்ற வேண்டுமெனவும், தாழ்ந்த பிரதேசங்கள், கண்டிப் பகுதி, வடக்கு கிழக்கு மாகாணங்களில் சாதிப்பாகுபாடு காட்டுவதைத் தண்டனைக்குரிய குற்றமாக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொள்வாரென அறியப்படுகிறது.

உத்தியோக மொழிச் சட்டத்தை நாடு முழுவதும் அமுலாக்கும் வகையில் விதிகள் தயாரிக்கப்படவேண்டுமெனவும் இக்கூட்டத்தில் ஓர் எம். பி. கேட்டுக் கொள்வாரென்றும் தெரியவருகிறது. கடந்த அரசாங்கம், உத்தியோக மொழிச் சட்டத்தை அமுலாக்க விதிகளைத் தயாரிக்காததால் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர் என்றும், நாடு முழுவதும் உத்தியோக மொழிச் சட்டத்தை அமுல்செய்ய விதிகள் தயாரிக்கும்படி அவர் கேட்டுக்கொள்வார் என்றும் தெரியவருகிறது.

சாதி ஒழிப்புக்குச் சட்டம் இயற்றும் விஷயமாக, தமிழ் எம். பி.க்கள் தங்கள் கருத்தைத் தெரிவிப்பார்கள் என்றும் அறியப்படுகிறது.

## இன்றுசர்வகட்சி மகாநாடு

யாழ்ப்பாணம். சனி

சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்குவது சம்பந்தமாக சர்வகட்சி மகாநாடு ஒன்று இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

பல்வேறு அரசியல்கட்சித் தலைவர்களும் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவிருக்கும் இக்கூட்டத்தில் சிறுபான்மைத்தமிழர் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவிருக்கின்றனர். இக் கூட்டத்துக்கு அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவையும் இதன் அமைப்பாளர் திரு. ஜே. எஸ். கந்தரம் அழைத்திருக்கிறார்.

## டெஸ்ட் கிரிக்கெட்

### பாகிஸ்தான் 3:257

டாக்கா, நவ. 18

இலங்கை கோஷ்டிக்கும் பாகிஸ்தான் கோஷ்டிக்கும் இடையிலான 2-வது கிரிக்கெட் டெஸ்ட் இங்கு இன்று ஆரம்பமானது. பாகிஸ்தான் கோஷ்டி துடுப்பெடுத்தாடத் தொடங்கியுள்ளது. இன்று ஆட்டம் முடியும் போது பாகிஸ்தான் மூன்று விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 257 ஓட்டங்களைப் பெற்றது

## டில்லியில் அமைதி

புதுடில்லி, நவ. 18

டில்லியில் எதிர்பார்த்தது போல மாணவர் ஆர்ப்பாட்டம் எதுவும் நடைபெறவில்லையென அறிவிக்கப்பட்டது. இன்று மாணவர் ஊர்வலம் நடத்துவதாக அறிவிக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து ஊர்வலமெதுவும் நடத்தப்படவில்லை. இன்று டில்லியிலுள்ள பல் கலைக்கழகங்களும்பாடசாலைகளும் மூடப்பட்டிருந்தன.

## கடும் நடவடிக்கை

புதுடில்லி, நவ. 18

சட்டம்செயல்படும்படி அரசாங்கம் பாதுகாத்துக் கொள்ளுமென்றும், மீறுபவர்களை சுட்டுத் தள்ளவும் பொலிசாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் உள்துறை மந்திரி திரு. சவான் நேற்று லோக் சபாவில் அறிவித்தார்.

## மானிப்பாய் இந்து கல்லூரி

### க. பொ. த. (உயர்தரம்) முதலாம் வருடம் 1967 கலை - விஞ்ஞானப் பகுதிகள்

மேற்படி வகுப்புக்களிற் சேர விரும்பும் மாணவர்கள் உரிய விண்ணப்பப்பத்திரத்தில் 30-12-66க்கு முன் அதிபருக்கு விண்ணப்பிக்கவும். தூயகணிதம், பிரயோக கணிதங்களுடன் கலைப்பிரிவுப் பாடங்கள் எடுக்கும் மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவர். 1387

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் தொடனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி, 62-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு நவம்பர் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org